பக்கங்கள் 26+ 02

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | சித்திரை 14 ஞாயிற்றுக்கிழமை 27.04.2025 | அதிர்வு 267

## களனி ஆற்றில் ஆணின் சடலம்

**சிதைவடைந்த நிலையில் மீட்பு**



களனி ஆற்றில் அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் மிதந்த 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# கணிதப் பிரிவில் ஹாட்லி மாணவன் சாதனை!



ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் பிரகாரம் கணிதப் பிரிவில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

கந்ததாசன் தசரத் என்ற மாணவனே கணிதப் பிரிவில் 3 ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட ரீதியில் முதலிடத்தையும், அகில இலங்கை ரீதியில் இரண்டாவது இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளார்.

அதேவேளை, ஹாட்லிக் கல்லூரியில் கணிதப் பிரிவில் 21 மாணவர்கள் 3 ஏ சித்திகளையும், உயிரியல் பிரிவில் 5 மாணவர்கள், 3 ஏ சித்திகளையும், வணிகப் பிரிவில் ஒரு மாணவன் 3 ஏ சித்திகளையும், கலைப் பிரிவில் ஒரு மாணவன் 3 ஏ சித்திகளையும்

# புதிய சட்டங்களை உருவாக்கி இனவாதத்தைக் களைவோம்!

## திஸ்ஸ விகாரைப் பிரச்சினைக்கும் தீர்வு காண்போம் என்கிறார் அநுர





**(கி.வசந்தன்)**

**“யாழ்ப்பாணத்தில் திஸ்ஸ விகாரைப் பிரச்சினையில் இருப்பது இனவாதம். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். தற்போது உள்ள சட்டங்கள் இனவாதத்தை ஒழிக்கப் போதாது. சட்டங்களைப் புதிதாக உருவாக்கி இனவாதத்தைக் களைவோம்.”**

**- இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.** 02

# 9 ஆயிரம் மாணவர்கள் 3 பாடங்களிலும் ‘ஏ’ சித்தி



ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் 9 ஆயிரத்து 457 மாணவர்கள் மூன்று பாடங்களிலும் ‘ஏ’ சித்தியைப் பெற்றுள்ளனர் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஜெனரல் அமித் ஜெயசுந்தர இன்று தெரிவித்தார்.

மூன்று பாடங்களிலும் ‘ஏ’ சித்திகளைப் பெற்ற மாணவர்களின் சதவீதம் 3.45 சதவீதம் என்றும் 02

# சித்தங்கேணியில் சிறுமி வன்புணர்வு

**மூவர் கைது**

**(ந.லோகதயாளன்)**

யாழ். சித்தங்கேணியில் சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தின் முயற்சியால் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி கைது தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவின் 03

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா மாநகர சபை மைதானத்தில் நேற்று சனிக்கிழமை மாலை நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "எமது பரம்பரை யுத்தம் செய்தது. ஆனால், அடுத்த பிள்ளைகளின் பரம் பரைக்கும் அதனை விடமாட்டோம். பிரிவினைவாத அரசியல் முடிவுக்கு வந்தது. இழந்த ஒற்றுமையை நிச்சயம் கட்டியெழுப்புவோம். இனவாதத்தை இல்லாமல் செய்து தேசிய ஒற்றுமையை வளர்ப்போம்.

வடக்கில் பல இடங்கள் போரால் பாதிக்கப்பட்டன. பலர் வீடுகளை இழந்த னர். பாதைகளை இழந்தனர். தாய் மார்கள் பிள்ளைகளையும், கணவர் களை மனைவிமாரும் இழந்தார்கள். நண்பர்களை இழந்தனர். கவலையான பாரிய ஒரு நிலைமைதான் இருந்தது. அதுதான் யுத்தம்.

தற்போது போர் முடிந்து 16 வருடங்கள் கழிந்துள்ளது. இன்னும் அதன் மிச்ச சொற்பங்கள் இருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் திஸ்ஸ விகாரை தொடர்பாக ஒரு பிரச்சினை இருக் கின்றது. அது என்ன பிரச்சினை? அந் தக் காணிகளின் உரிமையாளர்களும், பன்சாலையின் பிக்குமாரும் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க இடமளித்தால் அவர்கள் தீர்த்துக்கொள்வார்கள். தீர்க்க இடமளிக்காமல் இருப்பது அரசியல். அந்த அரசியல்வாதிகளுக்குத் தேவை இதனூடாக இனவாதத்தைத் தூ ண்டுவது. இதன் காரணமாகவே தீர்க்க முடியாமல் உள்ளது.

வடக்கில் தோல்வி கண்ட அரசியல் வாதிகள் அந்த இடத்திலே ஒரு முறுகல் நிலையை ஏற்படுத்த முனைகின்றனர். தென் பகுதியில் தோல்வி கண்ட அரசியல் தலைவர்கள் அங்கே ஒரு முரண்பாட்டை ஏற்படுத்த முனைகின்றார்கள். நாங்கள் காணி உரிமையாளர்கள் - பிக்குமார்கள் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்து வோம். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். தற்போது உள்ள சட்டங்கள் இனவாதத்தை ஒழிக்கப் போதாது. சட்டங்களைப் புதிதாக உருவாக்கியாவது இனவாதத்தைக் களைவோம்.

தேசிய மக்கள் சக்தி அரசின் முதலா வது ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் உரு வாக்கப்படும். தமிழ் பேசும் திறமை யானவர்களை இலங்கை கிரிக்கெட் அணியில் இணைக்க வேண்டும். தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒன்றாக இணைந்து இருந்து அந்த இடத்தில் விளையாடும் இலங்கை அணியை ஊக்குவிக்க வேண்டும். அதனை நாம் ஏற்படுத்துவோம்.

தேர்தல் காலங்களின்போது தேர்தல் அலுவலகங்களைத் தீயிட்டு எரித்தமை தொடர்பாக நாங்கள் கேள்விப்பட்டிருக் கின்றோம். ஆனால், யாழ்ப்பாணத்தில் நூலகத்தை எரித்தார்கள். உலகில் எங்கும் அப்படி நடக்கவில்லை. நாங்கள் அதற்கு 10 கோடி ரூபா ஒதுக்கியுள்ளோம்.

போரின் பின்னர் கூகுள் வரைபடத் தைப் பார்த்தே வனவளத் திணைக் களத்தின் கட்டுப்பாட்டில் மக்களின் காணிகளை எடுத்தார்கள். அந்தக் காணிகளை நேரடியாகச் சென்று பார்த்து அதனை அளந்து எடுக்கவில்லை. காடாக இருக்கும் காணிகளைப் பார்த்தார்கள், எடுத்தார்கள். மக்களின் காணிகள் அதற்குள்ளே இருக்கின்றன. விவசாயக் காணிகள் உள்ளன. குளங்கள் உள்ளன. எனவே, மீண்டும் அதனை ஆய்வு செய்து அனைத்து காணிகளையும் இந்த மக்களுக்குப் பெற்றுக் கொடுப்போம்.

நெல் களஞ்சியசாலைகள் பல உள்ளன. நெல் கொள்வனவுக்காக நாங்கள் 500 கோடி ரூபா வழங்கினோம். ஒரு விலையையும் நிர்ணயித்தோம். அந்த விலையை விடக் குறைந்தால் எங்களுக்குத் தாருங்கள். விலை கூடி னால் தனியாருக்கு வழங்குங்கள் பரவாயில்லை. நெல் விலை குறைந்தால் அரசு கொள்வனவு செய்யும். கூடினால் அவர்கள் எடுப்பார்கள். அந்த முறையை நாங்கள் செய்தோம். இந்தப் போகத்தில் நெல் விலை குறைந்ததா? இனி ஒருபோதும் நெல் விலை குறையாது நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

இப்படி ஒரு மாற்றம் வரும் என அரசியல்வாதிகள் எதிர்பார்க்கவில்லை. ஜனாதிபதி என்பது பரம்பரையான ஒன்று என இருந்தார்கள். தந்தை, மகன், பேரன் எனப் போட்டியிட்டார்கள். பதவி யில் இருந்தார்கள். ஆனால், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தம்புதேகமவில் இருந்து மக்கள் சார்ந்தவன் வந்துள் ளான். உண்மைதானே. இதைப் பலரும் எதிர்பார்க்கவில்லை. குழம்பிப் போயுள்ளார்கள்.

2 ஆயிரம் பொலிஸாருக்கு வெற்றி டங்கள் உள்ளன. அதில் தமிழ் மொழி பேசும் பொலிஸாரை அதிகமாக உள்வாங்க உள்ளோம். குறைந்தது 500 பேராவது தமிழ் பேசுபவர்கள் இணைய வேண்டும். ஆனால், பொலிஸ் சேவையில் இணையத் தமிழ் இளைஞர், யுவதிகளுக்குப் பெரிதாக விருப்பம் இல்லை. ஆனால், அது நல்ல தொழில்தானே. நீதியுடன் தொடர்பு டையது. நல்ல சம்பளம் வரும். எனவே, தமிழ் இளைஞர், யுவதிகள் பொலிஸ் சேவையில் இணைய வேண்டும். நாடு பூராகவும் 30 ஆயிரம் அரச நியமனங் களை வழங்குவோம். இதன் மூலம் பலருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

ஜனாதிபதித் தேர்தலை விட நாடாளுமன்றத் தேர்தலில் அதிக வாக்குகளை வழங்கினார்கள். தற்போது உள்ளூராட்சி சபைகளைச் சுத்தம் செய்ய தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க வேண்டும்." - என்றார்.

## களனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் மீட்கப்பட்டுள்ளது.பேலிய கொடை பொலிஸா

ருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படை யில் நேற்று சனிக்கிழமை மாலை சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

சடலம் இன்னும் அடையாளம் காணப் படவில்லை.

உயிரிழந்தவர் சுமார் 50 வயது மதிக் கத்தக்க 5 அடி 6 அங்குல உயரம் கொண் டவர் எனவும், நீல நிற ரீ - சேர்ட் அணிந் திருந்ததோடு, இடுப்புக்குக் கீழே நிர்வா ணமாக இருந்தார் எனவும் பொலி ஸார் தெரிவித்தனர்.

உடல் சிதைவடைந்த நிலையில் இருப்பதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.சடலம் கொழும்பு தேசிய வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசார ணைகளை பேலியகொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 9 ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சைகள் ஆணையர் நாயகம் கூறி னார்.

கொழும்பில் விசேட ஊடக சந்திப்பை நடத்தி உரையாற்றும்போதே அமித் ஜெயசுந்தர இவ்வாறு தெரிவித்தார்.

பெறுபேறுகளின்படி, பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளில் 64.73 சத வீதமானவர்கள் பல்கலைக்கழக நுழை வுக்கான அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளனர் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

பல்கலைக்கழக நுழைவுக்கான அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்யும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்றும் அவர் கூறினார்.

இந்த ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 77 ஆயிரத்து 588 மாணவர்கள் பல்கலைக்கழக நுழைவுக்கான அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளனர் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரி வித்தார்.

## கணிதப் பிரிவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுள்ளார்.

**கணிதப் பிரிவு**

கந்ததாசன் தர்சத் 3ஏ, யோகேந்திரன் அர்ணிகன் 3ஏ, ஜெயசந்திரன் நிவேதன் 3ஏ, ஜெயகுமார் நிவீதிகன் 3ஏ, நிர்மலன் சலீன் 3ஏ, அன்ரன் ஜேசுராசா ஜூட் பிரியதர்ஷன் 3ஏ, சிவனேசன் அர்ணிகன் 3ஏ, ராமேஸ்வரம் சதுர்சன் 3ஏ, சிவரஞ் சன் தனோஜ் 3ஏ, அஞ்சனகுமார் ஷாகிஞ்சை 3ஏ, முருகானந்தன் சாருஜன் 3ஏ, ரகு சரவணன் 3ஏ, நாகேஷ்வரன் கிஷ்ணமேனன் 3ஏ, ஜெயகுமார் விஷ் ணுராஜ் 3ஏ, சுபாகு அட்சயன் 3ஏ, மோகன் அர்ஜுன் 3ஏ, சுப்ரமணியம் அர்ஜுன் 3ஏ, குகநாதன் வைகுந்தன் 3ஏ, ஸ்ரீலயந்திரா அஞ்சனன் 3ஏ, முருகமூர்த்தி பிரவீன் 3ஏ, கஜேந்திரன் ஸ்னேகன் 3ஏ, சண்முகதாஸ் கீர்த்தி 2ஏ பி

**உயிரியல் பிரிவு**

கிருபாகரன் கஜீவன் 3ஏ, சந்திரபபா மதுசன் 3ஏ, உதயகுமரன் மதுமிதன் 3ஏ, வித்யாபதி ஹர்சன் 3ஏ, சுபேந்திரன் தினேஷ் 3ஏ, தேவதாஸ் தேவானந்தா 2ஏ பி, திருச்செல்வம் கௌதம் 2ஏ பி

**இயந்திரவியல் தொழில்நுட்பம்**

கிரீபரூபன் ஜனார்த்தன் 3பி, நீதிராஜ் நிதுஜன் 2பி சி, தயாபரன் மதிவாணன் 2பி சி, ஜில்பேர்ட் யோகராசா கியூபேட் கிருஷனன் 2பி எஸ், அகிலரூபன் கவீசன் பி 2சி

**வணிகப் பிரிவு**

தங்கவேல் அனுசன் 3ஏ

**கலைப் பிரிவு**

சுப்பிரமணியம் மதுசன் 3ஏ, சந்திரசேகரம் நிதர்சன் 2ஏ பி



# புனித மரியாளில் 4 மாணவர்களுக்கு 3 ஏ

(எஸ்.ஜினோதன்)

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் பிரகாரம் சப்ரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டத்தில் எட்டியாந்தோட்டை நகரில் அமைந்துள்ள கேஃ தெஹிஃபுனித மரியாள் தமிழ் மகா வித்தியாலயத்தின் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இந்தப் பாடசாலையில் 4 மாணவர்கள் 3 பாடங்களிலும் 'ஏ' சித்திகளைப் பெற்று அசத்தியுள்ளனர்.

கலைப் பிரிவில் ஜெயக்குமார் ஜெரோன் மற்றும் நாகராஜா கிஷாந்தனி ஆகிய மாணவர்கள் 3 பாடங்களிலும் 'ஏ' சித்திகளைப்பெற்றுள்ளனர்.

வர்த்தகப் பிரிவில் சிவராஜா காயத்திரி மற்றும் மஹேந்திரன் கோகிலா ஆகிய மாணவர்கள் 3 பாடங்களிலும் 'ஏ' சித்திகளைப் பெற்று பாடசாலைக்கும், ஆசிரியர்களுக்கும், தங்களது பெற்றோர்களுக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.



# ஒரே நேரத்தில் இரு மாணவிகளைக் காதலித்த மாணவன் தவறான முடிவெடுத்து உயிர்மாய்ப்பு

காதல் பிரச்சினை காரணமாக பல்கலைக்கழக மாணவன் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் 24 வயதான கொட்டகலையைச் சேர்ந்த மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகம் மற்றும் மட்டக்களப்பு பல்கலைக்கழக மாணவிகள் இருவருடன் ஏற்பட்ட காதல் தொடர்பு, சண்டையில் முடிந்ததால் இவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## சித்தங்கேணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் கருத்துத் தெரிவிக்கையில்,

"இந்தச் சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலுகத்தின் நடவடிக்கையின் மூலமே வெளிக்கொணரப்பட்டது.

மேற்படி சிறுமி 12 வயது வயதில் இருந்தே துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி இந்தச் சிறுமி எமது அலுவலகத்துக்கு வருகை தந்து தனக்கு ஏற்பட்ட துஷ்பிரயோக அவலத்தை முறையிட்டார். எமது அலுவலகம் துரிதமாகச் செயற்பட்டு அன்றைய தினமே வடக்கு மாகாண நன்னடத்தை திணைக்கள ஆணையாளர் ஊடாக மேற்படி சிறுமி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிறுமி மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையிலேயே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்." – என்றார்.

## உள்ளூராட்சி சபை
## தேர்தல் களம்




# சாவகச்சேரியில் தமிழரசின் மாபெரும் பிரசாரக் கூட்டம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சாவகச்சேரித் தொகுதிக்கான உள்ளூ ராட்சி சபைத் தேர்தல் பிரசாரக் கூட்டம் சாவகச்சேரி தொகுதிக் கிளைத் தலைவர் சட்டத்தரணி கேசவன் சயந்தன் தலை மையில் நேற்று சனிக்கிழமை மாலை நடைபெற்றது.

தொடக்கவுரையைத் தொகுதிக் கிளைச் செயலாளர் சங்கரன் தங்கராசா நிகழ்த்தினார்.

கட்சியின் பதில் தலைவர் சி.வி. கே.சிவஞானம், கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத் தரணி எம்.ஏ.சுமந்திரன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் ஆகியோர் பிரதான உரைகளை நிகழ்த்தினர்.

சாவகச்சேரி நகர சபையின் முன்னாள் தவிசாளர் திருமதி சிவ மங்கை இராமநாதன் நன்றியுரையை வழங்கினார்.

மழைக்கு மத்தியிலும் கணிசமான பொதுமக்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.





## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்





# படையினரால் கையகப்படுத்தப்பட்ட மக்களின் அனைத்து காணிகளையும் விடுவித்தே தீருவோம்

### *கிளிநொச்சி பரப்புரைக் கூட்டத்தில் ஜனாதிபதி உறுதி*

போரின்போது பாதுகாப்புப் படையினரால் கையகப்படுத்தப்பட்ட பொது மக்களுக்குச் சொந்தமான அனைத்து காணிகளையும் மீண்டும் விடுவித்து மக்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உறுதியளித்தார்.

கிளிநொச்சியில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

போரின்போது அழிக்கப்பட்ட வீடுகளை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு தற்போதைய அரசு உதவும் என்றும், போரின்போது மூடப்பட்ட கிளிநொச்சி பகுதியில் உள்ள வீதிகளை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“பாதுகாப்பு காரணங்களுக்காக மக்களின் காணிகள் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளன என்பதை நாங்கள் அறிவோம். இது குறித்து இராணுவ அதிகாரிகள் மற்றும் தளபதிகளுடன் நாங்கள் கலந்துரையாடினோம்.

விடுவிக்கப்படக்கூடிய ஒவ்வொரு அங்குல நிலத்தையும் மக்களிடம் திருப்பித் தர நாங்கள் செயற்படுவோம். அது மட்டுமல்லாமல், பாரம்பரியமாக பயிரிடப்பட்ட சில காணிகள் கூகுள் படத்தைப் பார்த்து வனப் பாதுகாப்புத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டன.

இவை இந்தப் பகுதியில் பயிரிடப்பட்ட நிலங்கள், மக்களின் காணிகள், முறையான ஆய்வுக்குப் பிறகு அவற்றைத் திருப்பித் தர நாங்கள் பணியாற்றி வருகின்றோம். மேலும் பல வீதிகளும் மூடப்பட்டுள்ளன. கொழும்பில் உள்ள ஜனாதிபதி மாளிகைக்கு முன்னால் கொழும்பு வீதி திறக்கப்பட்டுள்ளது.

அலரி மாளிகைக்கு முன்னால் உள்ள வீதி திறக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சியில் வீதிகள் ஏன் மூடப்பட்டுள்ளன? மக்கள் பயணிக்க அந்த வீதிகள் அனைத்தையும் நாங்கள் திறந்து விடுவோம்.

யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே ஏராளமான வீதிகளை மீண்டும் திறந்துள்ளோம். இந்த நாட்டை இயல்பு நிலைக்குக் கொண்டுவர வேண்டும். போரினால் வீடுகளை இழந்த மக்களையும் நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம்.

வடக்கில் வீடு கட்ட வசதி இல்லாத ஏராளமானோர் உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் வீடுகள் கட்டுவதற்கு எங்கள் அரசு ஆதரவளிக்கும்.” – என்றார்.






# கதிர்காமம் மாணிக்க கங்கையில் நீராடியவர் சடலமாக மீட்கப்பட்டார்!

## வேரகல நீர் தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டமையால் அனர்த்தம்

**(பொகவந்தலாவ எஸ். சதீஸ்)**

கதிர்காமம் மாணிக்க கங்கையில் நீராடிக் கொண்டிருந்த ஹட்டன் பகுதியை சேர்ந்த நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

எவ்வித அறிவித்தலுமின்றி வேரகல நீர் தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்ட நிலையில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது என்றும் அது தொடர்பாக நீர் தேக்கத்தின் பொறியியலாளர் மீது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புத்தள வேரகல நீர் தேக்கத்தின் வான்கதவுகள் எவ்வித முன் அறிவித்தலுமின்றி திறக்கப்பட்டமையால் கதிர்காமம் மாணிக்க கங்கையில் நீர்மட்டம் அதிகரித்தது. இதனால் மாணிக்க கங்கையில் நீராடி கொண்டிருந்த நபர் நீரில் அடித்து செல்லப்பட்டார். இந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று கதிர்காமம் பொலிஸார் தெரிவித்தனர்.



இந்தச் சம்பவம் நேற்று (26) சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்ட நபர் புதிய வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்த நிலையில், தனது நேர்த்திக் கடனுக்காக கதிர்காமம் முருகன் ஆலயத்துக்கு சென்றிருந்தார். அங்கு மாணிக்ககங்கையில் நீராடிய போது நீரின் வேகம் அதிகரித்து அள்ளுண்டு சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சடலமாக மீட்கப்பட்டவர் ஹட்டன் பகுதியை சேர்ந்த ஒருபிள்ளையின் தந்தையான 52 வயதுடைய பழனி லோகேஸ்வரன் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

பொலிஸார் மற்றும் பொதுமக்களின் உதவியோடு மீட்கப்பட்ட சடலம் கதிர்காமம் பிரதேச வைத்தியசாலையில் இருந்து சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்காக ஹம்பாதோட்ட மாவட்ட வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. பிரேத பரீசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கபடவுள்ளது என்று கதிர்காமம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# நானுஓயா கிளாஸ்கோ தோட்டத்தில் கம்ப மரத்திலிருந்து வீழ்ந்தவர் பலி!





**(தலவாக்கலை பி.கேதீஸ், பொகவந்தலாவ எஸ். சதீஸ் )**

நானுஓயா கிளாஸ்கோ தோட்டத்தில் நேற்று (26) இடம்பெற்ற 'பொன்னர் சங்கர்' நாடகத்தின் இறுதி நிகழ்வான கம்ப மரம் ஏறும் நிகழ்வு இன்று (27) காலை இடம்பெற்றது. இந்த நிலையில் அந்தக் கம்ப மரத்தில் ஏறியவர் தவறி விழுந்து உயிழந்துள்ளார் என்று நானுஓயா பொலிஸார் தெராவித்தனர்.

நானுஓயா கிளாஸ்கோ தோட்டத்தைச் சேர்ந்த எம்.சதாசிவம் (வயது 60) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நானுஓயா கிளாஸ்கோ தோட்டத்தில் நேற்று (26) இரவு ஆரம்பிக்கப்பட்ட 'பொன்னர் சங்கர்' கூத்து இன்று காலை முடிவுறும் நிலையில் திறந்தவெளியில் தயார் செய்யப்பட்டிருந்த 60 அடி உயரமான மரக்கட்டையில் இணைக்கப்பட்ட மர ஏணியில் (கம்ப மரம்) ஏறிய நபர் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இதுதொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

நானுஓயா கிளாஸ்கோ தோட்டத்தில் ஆண்டுதோறும் இந்தப் பொன்னர் சங்கர் கூத்து நடத்தப்படுவது வழமை. இரவு முழுவதும் நடந்த நாடகத்தின் பின்னர் காலையில் பொது வெளியில் அமைக்கப்பட்டிருக்கும் கம்ப மரத்தில் பெரிய காந்தி எனும் கதாபாத்திரம் அதில் ஏறி சில நிமிடங்கள் தவம் செய்து பூஜை செய்ததன் பின்னர் அதிலிருந்து இறங்குவார். அதுபோலவே குறித்த நபர் மரத்தில் ஏறியபோது மரத்திலிருந்து தவறி கீழே வீழ்ந்து உயிரிழந்தள்ளார்.

கம்ப மரத்திலிருந்து விழுந்த நபர் சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் நானுஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அபாய எச்சரிக்கை

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் - 2022 இல் - ஏற்பட்ட மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு பின்னர் இலங்கையின் பொருளாதாரம் நேர் சீராக வளர்ந்து வருவதாகக் கூறப்பட்டாலும், நாட்டில் மூன்றில் ஒரு பகுதியினர் வறுமையில் உள்ளனர் அல்லது மீண்டும் வறுமையில் விழும் அபாயத்தில் உள்ளனர் என்று உலக வங்கி தரப்பிலிருந்து வெளியாகி இருக்கும் அறிக்கை கூறுகின்றது. இது, இலங்கையைப் பொறுத்தவரை ஓர் அபாய எச்சரிக்கைதான்.

மாலைதீவுகள், நேபாளம் மற்றும் இலங்கைக்கான உலக வங்கிப் பிரிவு இயக்குனர் டேவிட் சிஸ்லன் கடந்த 23ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில் இந்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலக வங்கி வெளியிட்ட அறிக்கையில் அடுத்த ஆண்டு - 2026 இல் - நாட்டில் 3.1 வீதம் மிதமான பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. ஆயினும் வணிகம், முதலீடு, பொருளாதார போட்டித் தன்மை, பெண் தொழிலாளர்கள் பங்களிப்பை உறுதிப்படுத்தும் சீர்திருத்தங்கள் செய்யப்படுவது போன்றவை மிக அவசியமானவை என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

நாட்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத்துறை வெளியிட்ட அறிக்கையின்படி, கடந்த ஆண்டின் கடைசிக் காலாண்டில் பெண்கள் பெருமளவில் பொருளாதார ரீதியில் செயலற்றவர்களாக இருக்கின்றார்கள் என்பது தெளிவாகியிருக்கிறது. ஆறரை லட்சத்துக்கும் அதிகமான பெண்கள் பொருளாதார ரீதியில் மிக மோசமான நிலையில் உள்ளனர். அவர்கள் தொழிலாளர் சந்தையில் வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள், வேலையற்றுக் காணப்படுகிறார்கள் என்று கூறப்படுகிறது.

அனைத்து வயதினரிடையேயும் ஆண்களை விட பெண்களிடையே வேலையின்மை அதிகமாக உள்ளது என்பதை கணக்கெடுப்பு முடிவுகள் மேலும் வெளிப்படுத்துகின்றன. இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கான வேலை வாய்ப்புகள் நெருக்கடி தரும் அளவில் பற்றாக்குறையாக உள்ளன என்று கூறப்படுகிறது.

நாட்டில் வறுமை நிலை உயர்ந்து வருவதாக உலக வங்கியின் அறிக்கை கூறுகிறது. வேலையின்மை விகிதம் 25 வீதம் என்று கூறப்பட்டாலும் 15 முதல் 24 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான வேலையின்மை - அதுவும் பெண்களுக்கான வேலையின்மை - அதிகம் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

2019 ஒருவருடைய அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய நாளாந்தம் 6,966 ரூபா தேவை என கணக்கிடப்பட்டது. இப்போது அது 134 சதவீதம் மேலதிகமாக அதிகரித்து 16,318 ரூபாவாக உயர்ந்துள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் உடல் பருமன் (வயதுக்கு ஏற்ற எடை குறைவு) மற்றும் வளர்ச்சி குறைபாடு (வயதுக்கு ஏற்ற உயரம் குறைவு) ஆகியவற்றால் பாதிக்கப்படும் சதவீதம் அதிகரித்துள்ளது. இது ஊட்டச்சத்து குறைபாடுகளை வெளிப்படுத்துகிறது. இலங்கையில் ஊட்டச்சத்து நிலைமை தொடர்ச்சியான மற்றும் கவலைக்குரிய குறைபாடு நிலையை வெளிப்படுத்துகின்றது. போதுமான ஊட்டச்சத்து கிடைப்பதற்கான இடைவெளி அதிகரித்து வருகின்றது என்று உலக உணவுத் திட்டம் இலங்கை குறித்து வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் இலங்கையின் மோசமான பொருளாதார நிலைமை, வறுமை, மக்களின் பாதிப்பு ஆகியவற்றை அம்பலப்படுத்துவனவாக இருக்கின்றன.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



### மக்களால் தெரிவு செய்யப்படும் கட்சி உறுப்பினர்கள்

# மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவிட்டால் அவர்களது உறுப்பினர் பதவி பறிக்கப்படும்

### இ.தொ.கா. பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

**(மஸ்கெலியா)**

மக்களால் தெரிவு செய்யப்படும் இ.தொ.கா. கட்சி உறுப்பினர்கள் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவிட்டால் அவர்களது உறுப்பினர் பதவி பறிக்கப்படும் என்று பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கொட்டகலை பிரதேச சபைக்கு உட்பட்ட தோட்ட பிரதேசங்களில் உள்ளூராட்சி மன்றம் தேர்தல் பிராசார கூட்டம், பாராளுமன்ற உறுப்பினரும், இ.தொ.கா. பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது தேர்தல் பிராசார கூட்டத்தில் கலந்து கொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே ஜீவன் தொண்டமான் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டிருந்தார். தொடர்ந்து மக்கள் மத்தியில் உறையாற்றுகையில்,

சிந்தித்து பாருங்கள் ஒரு சமூகமாக நமக்கு எமது வரலாறு தெரியவில்லை. மாறாக எம்மிடத்தில் திணிக்கப்பட்ட வரலாறு மட்டும்தான் தெரிகின்றது.

இன்றைய சூழ்நிலையில் சம்பள பிரச்சினையை பொருத்தமட்டில், 2020 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலின் போது நீங்கள் எனக்கு வாக்களித் திருந்தீர்கள். எனக்கு இராஜாங்க அமைச்சு பதவியும் வழங்கினார்கள். அதன் பிறகு மருதப்பாண்டி ராமேஸ்வரன் மட்டும் இருந்தார். நான் அந்தஸ்துள்ள அமைச்சரவையில் இல்லை. இராஜாங்க அமைச்சு மட்டும் தான். இரண்டு பேர் மட்டுமே இருந்தோம். ஆனாலும் 6 மாத காலப்பகுதிக்குள் எந்தவித போராட்டமும் இல்லாமல் 1000 ரூபா சம்பளத்தை உங்களுக்குப் பெற்றுத் தந்தோம்.

நாங்கள் அரசுடன் இருந்த காலப் பகுதியில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 2 லட்சம் காணி உரிமைகளை வழங்குவதற்கு 4 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டிருந்தோம். அரச மாற்றத்தின் பின்னர் அந்தப் பணத்துக்கு என்ன நடந்தது? எங்களுடைய மக்களுக்கு வீட்டுரிமையும், காணி உரிமையும் வழங்குவதே அவர்களுக்கான நிரந்தர தீர்வாகும்.

அத்தோடு பெருந்தோட்ட பாடசாலை மாணவர்களின் கல்வித் துறையை மேம்படுத்த இந்திய அரசின் உதவியுடன் 19 ஆசிரியர்களை வரவளைத்து மலையக ஆசிரியர்களுக்கு விஞ்ஞாகம், தொழில்நுட்பம், ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடத்துரைகளில் விசேட பயிற்சிகளை வழங்கினோம். மேலும் மலையகத்தில் உள்ள 26000 முன்பள்ளி மாணவர்களுக்கு காலை சத்துணவு வழங்கினோம்.

தற்போது நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தல் ஊடாக தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கு பல்வேறு நிபந்தனைகளை இ.தொ.கா. விடுத்துள்ளது. அதாவது மக்களால் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் வாரத்துக்கு ஒருமுறை மக்களைச் சந்துத்து கலந்துரையாடவேண்டும். அவர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்க்கப்படவேண்டும் போன்ற மக்கள் நலன் சார்ந்த பல்வேறு நிபந்தனைகளை விதித்துள்ளது. அதை மீறும் பட்சத்தில் குறித்த வேட்பாளரின் பதவியை மூன்று நாள்களில் பறித்து புதிய உறுப்பினர் அந்த இடத்துக்கு நியமிக்கப்படுவர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு நிரந்தர தீர்வாக அமையாது. மாறாக நாள் கூலி முறைமை இல்லாதொழிப்பதே நிரந்தரத் தீர்வாகும்.

இந்தப் பிரசார கூட்டத்தில் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இ.தொ.கா. பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான், பிரதி தலைவர் அனுசியா சிவராஜா, குறித்த பிரதேசத்தின் உள்ளூராட்சி மன்றம் தேர்தலில் போட்டியிடும் பேட்பாளர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துக் கொண்டனர்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு மக்கள் வாக்குகளால் தண்டனை வழங்குவர்

## முன்னாள் எம்.பி. சந்திகுமார் தெரிவிப்பு

கிளிநொச்சியில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கடந்த இரண்டு தடவையும் ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்கள் ஊழல், மோசடிகள், அதிகார துஷ்பிரயோகங்களைத் தவிர வேறு எதனையும் செய்யவில்லை. இக் காலகட்டத்தில் மக்களின் வரிப்பணம் வீண் விரையம் செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு வரும் ஆறாம் திகதி மக்கள் வாக்குகளால் தண்டனை வழங்க வேண்டும்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்ற ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து வண்ணாங்கேணி பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வில் கருத்துரைத்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதேச சபைத் தேர்தல் மிக முக்கியமானது. உள்ளூர் அபிவிருத்திகளில் பிரதேச சபைகளின் பங்களிப்பு மிக மிக அவசியமானது. உள்ளூர் வீதிகள் புனரமைப்பு, வீதி விளக்குகள், குடிதண்ணீர், முன்பள்ளிகள், கழிவகற்றல், மயானங்களை புனரமைத்தல் என மிக அடிப்படையான உட்கட்டுமான பணிகளை பிரதேச சபைகளே மேற் கொள்கின்றன.

எனவேதான் பிரதேச சபைகளின் அதிகாரத்துக்குத் தூய கரங்களைக் கொண்ட, வினைத்திறனாக செயற்படக் கூடிய, தூர நோக்கு சிந்தனையுள்ள தரப்புக்கள் வரவேண்டும் என்று நாம் வலியுறுத்தி வருகின்றோம். மக்களும் அவ்வாறானவர்களுக்கே வாக்களித்து வெற்றிப்பெறச் செய்ய வேண்டும்.

கடந்த இரண்டு தடவைகளும் மக்கள் ஒரு தரப்புக்கு வாக்களித்து அதிகாரத்துக்குக் கொண்டு வந்தனர். ஆனால் அவர்கள் செய்தது என்ன? கிளிநொச்சியில் உள்ள கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச சபைகளில் ஊழல்களும்,



மோசடிகளும், அதிகார துஸ்பிரயோகங்களுமே இடம்பெற்றன. மக்களின் வரிப்பணத்தை கொண்டு பொருத்தமற்ற அபிவிருத்தி பணிகளை மேற்கொண்டார்கள் இப்போது அதனை இடித்து அகற்றி வருகின்றார்கள்.

அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டு அவற்றை முழுமையாக மேற்கொள்ளாது நிதியைக் கையாடல் செய்திருக்கின்றார்கள், அனைத்து ஒப்பந்த பணிகளையும் தங்களது கட்சி சார்ந்தவர்களுக்கு வழங்கி அதன் ஊடாக முறைகேடுகளில் ஈடுப்பட்டனர். இவ்வாறு ஏராளமான குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முடியும்.

எனவேதான் நாம் மக்களிடம் உரிமையோடு கேட்டுநிற்பது கடந்த இரண்டு தடவைகள் ஏற்பட்ட அனுபவத்தை கொண்டு இந்த தடவை அத் தரப்புகளை நிராகரித்து புதியவர்களை தெரிவு செய்ய வேண்டும். கடந்த காலத்தில் அவர்கள் செய்த ஊழல் மோசடிகளுக்கு மக்கள் வாக்குகளால் தண்டனை வழங்க வேண்டும். இதுவே அவர்களுக்கு ஒரு படிப்பினையும், புதிதாக பொறுப்பேற்கின்றவர்களுக்கு பொறுப்பினையும் ஏற்படுத்தும்.– என்றார்.






# குடிநிலம் கிராமத்தில் சுயேச்சை குழுவின் சந்திப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேச சபையில் சுயேட்சை குழு வண்டில் சின்னம் சார்பில் போட்டியிடும் தலைமை வேட்பாளர் சு.சசிகுமார் மிகவும் பின்தங்கிய குடிநிலம் கிராம மக்களுடன் முதல் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தை நடத்தினார்.

எதிர்பாராத மழையையும் பொருட்படுத்தாமல், மக்கள் கூட்டத்தில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது .

அங்கு வேட்பாளர் சு.சசிகுமார் பேசுகையில்,

மாற்றத்தை நோக்கிய பயணத்தில் உங்கள் ஒவ்வொரு ஆதரவும் எங்களுக்குப் பெரிய மையமாக உள்ளது. எதிலும், மக்களின் பூரண ஆதரவு எமக்கு வேண்டும்.

வண்டில் சின்னம், ,ம்முறை மக்களின் பேராதரவுடன் அமோக வெற்றியை ஈட்டும் என்பதில் எங்களுக்குச் சிறிதும் ஐயமில்லை. திருக்கோவில் பிரதேச சபையை கைப்பற்றும் அதேவேளை பாரிய வேலைத் திட்டங்களை முன்னெடுக்க உள்ளோம். வெற்றி நிச்சயம். எனவே அனைவரும் வெற்றியின் பங்காளராகுங்கள். – என்றார்.

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# சலுகைகளுக்கும் பணத்துக்கும் சோரம் போவோர் நாங்கள் அல்லர்

## வேட்பாளர் எஸ்.எம்.முபீன் தெரிவிப்பு

(அபு அலா )

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியினர் சலுகைகளுக்காகவோ அல்லது பணத்துக்காகவோ சோரம் போவோர் அல்லர். எமது மக்களின் உரிமைகளையும், சலுகைகளையும் பெற்றுக் கொள்வதற்காகவே பயணித்துக் கொண்டிருக்கின்றனர்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியில் களமிறங்கியுள்ள நிலாவளி வேலூர் வட்டார வேட்பாளர் எஸ்.எம். முபீன் இவ்வாறு தெரிவித்தார்.

நிலாவெளியில் நேற்று (26) இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எமது கட்சியை அமோக வெற்றியடையச் செய்ய வேண்டிய பொறுப்பு எமது மக்களின் கைகளில் உள்ளது. எமது மக்களுக்காக எப்போதும் குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்ற கட்சியும் அதன் தலைமையும் என்றால் அது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியாகும் என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

குச்சவெளி பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளை சிறந்த திட்டங்களுடன் அபிவிருத்தி செய்வதுடன் மக்களுக்கு திருப்திகரமான சேவைகளை பெற்றுக் கொடுப்பதே எனதும் எமது கட்சியினதும் இலக்காகும்.

தேர்தல் வந்தால் சிலர் வீடுகளைத் தேடிப் போவதும், மக்களுக்கு பொய்யான வாக்குறுதிகளை வழங்கி அவர்களை எவ்வாறு ஏமாற்றலாம் என்ற சிந்தனையில் மாத்திரமே செயல்



படுகின்றார்கள். அவர்களால் எம்மக்களுக்கு பொய் கூறுவதைத் தவிர வேறு எதுவும் செய்யமுடியாது. தேர்தல் முடிந்தால் அவர்களின் ஆட்டம் முடிந்துவிடும்.

ஆனால், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியில் பயணித்துக் கொண்டிருப்பவர்கள் மாத்திரமே மக்களோடு மக்களாகக் களத்தில் நின்று செயற்படும் செயல் வீரர்களாக நிற்கின்றனர் என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.- என்றார்.

# இன பாகுபாடுகள் எதுவுமின்றி மக்கள் சேவையே எமது நோக்கு!

## வேட்பாளர் காலீதீன் மனாசீர் தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

நாவிதன்வெளி பிரதேச சபைக்கு இனிவரும் காலங்களில் இன பாகுபாடுகள் இன்றி மக்களுக்கு சேவைகள் மேற்கொள்வோம் என்பதை இவ்விடத்தில் கூறிக் கொள்ள விரும்புகின்றோம்.

இதனூடாக எமது சமுதாயத்துக்கு தேவையான சேவைகளை பூர்த்தி செய்வோம்.

நாவிதன்வெளி பிரதேச சபை தேர்தலில் மோட்டார் சைக்கிள் சின்னம் சுயேச்சைக் குழு இலக்கம் -2 இல் போட்டியிடும் வேட்பாளர் காலீதீன் மனாசீர் இவ்வாறு தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேச சபைகளுக்காக சுயேட்சைக்குழு இலக்கம் -2 இல் மோட்டார் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுபவர்கள் நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பு அம்பாறை மாவட்டம் சாளம்பைக் கேணி பகுதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நாவிதன்வெளி பிரதேச சபைக்கு எதிர்வரும் காலங்களில் மோட்டார் சைக்கிள் சின்னம் சுயேச்சைக் குழு இலக்கம் -2 இல் போட்டியிடும் நாங்கள் தெரிவு செய்யும் பட்சத்தில் அப்பிரதேச சபையில் இடம்பெறுகின்ற இன, மத அடிப்படையிலான சில விடயங்களை மாற்றுவோம்.

அதாவது இன, மத வேறுபாடு இல்லாமல் அனைத்து சமூகங்களுக்கும் சேவை செய்யக் கூடியதாக எங்களது சமூகப் பணியை முன்னெடுப்போம்.

கடந்த காலங்களில் இந்த சபைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் தங்களது வட்டாரங்களை சேர்ந்தவர்களுக்கும் வட்டாரங்களுக்கும் தான் அவர்களது பணியை முன்னெடுத்தார்கள்.ஆனால் நாங்கள் அவ்வாறு இருக்கப் போவதில்லை. நாங்கள் அனைத்து சமுதாயங்களுக்கும் எமது சேவைகளை மேற்கொள்வோம்.

கடந்த காலங்களில் இந்தப் பிரதேச சபையில் பாகு



பாடுகள் கூடிய பல்வேறு விடயங்கள் இடம்பெற்றிருந்தன. அதாவது தமிழ் சமூகம் முஸ்லிம் சமூகங்கள் என்ற பாகுபாடு பார்த்து சேவைகள் செய்யப்பட்டன.

நாங்கள் சபையை கைப்பற்றினால் சபை நடவடிக்கையில் இவ்வாறான பாகுபாடுகள் இன்றி மக்களுக்கு சேவைகள் மேற்கொள்வோம் என்பதை இவ்விடத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். இதனூடாக எமது சமுதாயத்துக்கு தேவையான சேவைகளை பூர்த்தி செய்வோம்.- என்றார்.





# இலங்கை மனித உரிமை ஆணைக்குழு ஆணையாளர் கல்முனைக்கு விஜயம்

(பாறுக் ஷிஹான்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி ஜெகான் குணதிலக தலைமையிலான உயர் மட்டக் குழுவினர் கல்முனை மனித உரிமைகள் பிராந்திய நிலையத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

கல்முனை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல்அஸீஸ் நெறிப்படுத்தலில் குழுக் கலந்துரையாடல்கள் இடம் பெற்றன. இந்தக் கலந்துரையாடலின் போது ஆணைக்கழுவின் சர்வதேச உறவுகளுக்கான பணிப்பாளர் க. கபிலன் வில்லவராஜன் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்ட உத்தியோகத்தர் ஏ.டபிள்யூ.எம். அஹமட் ஆகியோர் பங்கேற்றனர்.

வலிந்து காணாமல் போன தமிழ், முஸ்லிம் உறவினர்களின் குடும்பத்தினர்கள் கலந்து கொண்டு ஆணைக் குழுவிடம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இந்தக் குடும்ப உறுப்பினர்கள் எதிர்நோக்கும் பாதுகாப்புப் பிரச்சினைகள் சட்ட ரீதியாகவுள்ள உரிமைகள் பற்றியும் இதனை பிரயோகிக்கும் போது ஏற்படும் சவால்கள் பற்றியும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இது தவிர சிவில் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போது, தற்போதைய சூழலில் சிவில் அமைப்புக்கள் செயற்படுவதால் ஏற்படும் சவால்கள் அண்மையில் நடந்து கொண்டிருக்கும் மனித உரிமை மீறல்கள் பற்றியும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்படுவதற்கான பொறிமுறைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கல்முனை பிராந்திய பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போது, தமிழ்மொழிப் பிரயோகத்தின் அவசியம் பற்றியும் பாதிக்கப்பட்டு பொலிஸ் நிலையங்களுக்கு வரும் பொதுமக்களுக்கான விரைவான பரிகாரங்கள் மற்றும் வழக்கு நடைமுறையிலுள்ள சவால்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின் போது அம்பாறை மாவட்டத்தில் கரும்பு விவசாயிகளின் உணவுப் பாதுகாப்பு மற்றும் காணி உரிமை சம்பந்தமாகவும் நுரைச்சோலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சுனாமி வீடமைப்புத் திட்டம் மக்களிடம் இருபது வருடங்களுக்கு மேலாக கையளிக்கப்படாமை பற்றியும் காதி நீதிமன்றங்களின் அமர்வுகளின் போது பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் இருக்காமையால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இதற்கு மேலதிகமாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் நிர்வாக ரீதியான பிரச்சினைகள் பற்றியும் அதனால் பொதுமக்கள் எதிர்நோக்கும் நிர்வாகக் குறைபாடுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

மக்களின் கோரிக்கைகளை ஆணைக்குழு உரிய கவனமெடுத்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆணையாளர் கலாநிதி ஜெகான் குணதிலக இதன்போது கூறினார்.





# 'கல்வி ஆய்வின் அடிப்படைகள்' நூல் வெளியீட்டு விழா சனியன்று!

தேசிய கல்வி நிறுவனத்தின் ஆய்வுகள் அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் கலாநிதி எஸ். கே.பிரபாகரன் எழுதிய 'கல்வி ஆய்வின் அடிப்படைகள்' நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை (03) பிற்பகல் 3 மணிக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யூனியன் கல்லூரி அதிபர் தி.வரதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் கலந்து கொள்ளவுள்ளார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் ச.லலீசன் சிறப்பு விருந்தினராகக்கலந்து கொள்ளவுள்ளார்.

யாழ் பல்கலைக்கழக கல்வியற்றுறைத் தலைவர் கலாநிதி ஆ.நித்திலவர்ணன் நூல் ஆய்வுரையை நிகழ்த்தவுள்ளார்.

# மன்னார் சித்திவிநாயகர் கலைப் பிரிவில் முதலிடம்!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

உயர்தர பரீட்சையில் கலைப் பிரிவில் மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாட சாலை மாணவி ஜெயந்தன் பவதா ரணி முதல் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

கலை பிரிவில் மன்னார் கல்வி வல யத்தை சேர்ந்த மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலை மாணவி ஜெயந் தன் பவதாரணி 3 ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் தேசிய ரீதியில் 84 ஆவது இடத்தையும் பெற்று சாதனை படைத்து மன் னார் மாவட்டத்துக்குப் பெருமை சேர்த் துள்ளார்.



# கலைப்பிரிவில் மட்டு. மகாஜனா முதலிடம்!



(கல்லடி செய்தியாளர்)

நேற்று வெளியான க.பொ.த. (உயர்தரப்) பரீட்சையின் பெறுபேறுகளின்படி மட்டக் களப்பு மகாஜனக் கல்லூரி மாவட்டத்தில் முதல் இடத் தைப் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

குணராஜா அபிசா என்ற மாணவி அள வையியல், மனைப் பொருளியல் மற்றும் தமிழ் ஆகிய பாடங்களில் 3 ஏ தர சித்தி பெற்றுள்ளார்.

அத்தோடு அகில இலங்கை ரீதியில் 193 ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.

# கிரான் மத்திய கல்லூரி மாணவன் சாதனை!

(பழுவூரான்)

க.பொ.த. (உயர்தரப்) பரீட்சைப் பெறு பேற்றின் அடிப்படையில் மட்டக்களப்பு கிரான் மத்திய கல்லூரி மாணவன் சந்திரகுமார் சினோஜிதன் 3 ஏ சித்தி பெற்று மருத்துவ பீடத்துக்குத் தெரி வாகியுள்ளார். இவர் மாவட்ட மட்டத்தில் 17 ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.

இந்தப் பாடசாலை வரலாற்றில் முதல் முறையாக மருத்துவ பீடத்துக்குத் தேர்வான மாணவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# பொறியியல் பீடத்துக்கு செட்டிபாளையம் மாணவன்!



(பழுவூரான்)

க.பொ.த. (உயர்தரப்) பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் மட்டக் களப்பு செட்டிபாளையம் மகா வித்தி யாலய மாணவன் மேகவண்ணன் திருமாவளவன் கணிதப் பிரிவில் 3 ஏ சித்தி பெற்று பொறியியல் பீடத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

இவர் மாவட்ட மட்டத்தில் 15 ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.

# மாவட்டத்தில் மருத்துவத்தில் முதலாம் நிலை; கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி சாதனை!



(நூருல் ஹுதா உமர்)

இலங்கைப் பரீட்சைத் திணைக் களத்தால் வெளியிடப்பட்ட க.பொ.த. (உயர்தர) பரீட்சை (2024) பெறுபேறு களின் படி கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி யில் 10 மாணவிகள் மருத்துவ பீடத்துக்கு செல்ல தகுதி பெற்றுள்ளனர்.

இதில் மாவட்டத்தில் 1,4,28,35,37,43,49,60,63,67 ஆகிய நிலைகளை கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவி கள் பெற்றுள்ளனர்.

இலங்கைப் பரீட்சைத் திணைக் களத்தால் நேற்று (26) வெளியீடு செய்யப்பட்ட பெறுபேறுகளின் படி கல்முனை மஹ்மூத் மகளிர் கல் லூரி மருத்துவ பீடத்துக்கு 10 மாண விகளும், பொறியியல் பீடத்துக்கு 03 மாணவிகளும், உயிரியல் முறை மைகள் தொழில்நுட்பம் 16 மாண விகளும், வர்த்தக பீடத்துக்கு 12 மாணவிகளும், முகாமைத்துவ பீடத்துக்கு 08 மாணவிகளும் கலை கலாசார பீடத்துக்கு 48 மாணவிகளும் சித்திகளைப் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவிகளுக் கும் எமது பாடசாலைக்கு அதி சிறப்புச் சித்திகளை பெற்று பெருமை சேர்த்த மாணவிகளுக்கும் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு பல்வேறு நெருக்கடியான சூழ்நிலை களில் அனைத்து வழிகளிலும் வழிகாட்டியாக இருந்து செயற்பட்ட கல்லூரி முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் மற்றும் ஆசிரியர்கள் அனை வருக்கும் பாடசாலை சமூகம் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.





# அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் இடம்பெற்றுள்ள சிரமதான நிகழ்வுகள்

(றிஸ்வான் சாலிஹூ)

தேசிய உற்பத்தி திறன் விருது வழங்கல் போட்டி -2025 இனை முன்னிட்டு அக்கரைப்பற்று பிரதேச செயலக உற்பத்தி திறன் அபிவிருத்தி பிரிவினரால் பல வகைப்பட்ட வேலைத் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்று வருகின்றன.

அதனடிப்படையில் , அந்த வேலைத்திட்டத்தின் ஒன்றான மாபெரும் சிரமதான நிகழ்வானது நடைபெற்றது.

இந்தச் சிரமதான நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்ஸார், உதவிப்பிரதேச செயலாளர் றாசீத் யஹ்யா, சமுர்த்தி திட்ட முகாமையாளர் என்.ரீ.மசூர் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.



# ஆரோக்கியமான வாழ்க்கை முறைமைக்கு ஆயுள்வேத வைத்திய முறை அவசியமானது

## சம்மாந்துறை பிரதேச செயலாளர் முஹம்மது ஹனீபா தெரிவிப்பு!

(சர்ஜூன் லாபீர்)

ஆரோக்கியமான வாழ்க்கை முறையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான மிகப் பெறுமதியான சேவையை வழங்குவது ஆயுள்வேத வைத்திய முறைமையாகும் என்று சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல். முஹம்மது ஹனீபா தெரிவித்தார்.

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட மல்வத்தை-03 மஜீட்புரம் கிராமத்தில் இலவச ஆயுள்வேத வைத்திய முகாம் இடம்பெற்றது . இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

குறிப்பாக மேற்கத்தேய வைத்திய முறையானது ஒரு நோய் வந்த பின்னர் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு சிகிச்சை முறையாக காணப்படுகின்றது. ஆனால் ஆயுள்வேத வைத்திய முறையில் நம்முடைய வாழ்க்கை முறை உணவுப் பழக்க வழக்கங்கள், சுகாதார நடைமுறைகள், உடற்பயிற்சி, சூழலில் காணப்படுகின்ற மூலிகைகளை உணவாக பயன்படுத்தும் விடயம், உரிய நேரத்தில் உணவருந்தும் விடயம் இவ்வாறான நடவடிக்கைகள் மூலமாக எங்களுடைய எதிர்காலத்தை ஒரு வளமான எதிர்காலமாக மாற்றுவதற்கு துணைபுரிகின்றது.

இன்றைய காலகட்டத்தில் மேலைத்தேய வைத்திய முறையில் இருந்து ஆயுள்வேத வைத்திய முறைக்கு மாறிவருகின்ற சமூகம் அதிகமாக காணப்படுகின்றது. ஏனெனில் ஆயுள்வேத சிகிச்சை முறையை எமது முன்னோர்கள் மூதாதையோர்கள் நம்பி இருந்தனர். எனவே பாரம்பரிய வைத்திய முறைமையைக் கொண்டு முறையான சிகிச்சை முறைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

ஆயுள்வேத வைத்திய முறைமையூடாக அதிகமான வாழ்க்கைச் செலவினை கட்டுப்படுத்த முடியும் அதனூடாக குறுகிய காலத்தில் எமக்கு ஏற்பட்டுள்ள தொற்றா நோய்களில் இருந்து பாதுகாப்பு பெற முடியும்.என்பதோடு மருத்துவ துறையின் குறிக்கோள் பொதுச் சுகாதாரம் மற்றும் நோயறிதலைப் பராமரிப்பதாகும். ஆனால்



ஆயுள்வேத மருத்துவம் பரந்த நோக்கங்களைக் கொண்டுள்ளது. மனிதனின் ஆரோக்கியத்தைப் பேணுவதும், நோயைக் கண்டறிந்து முழுமையாக குணப்படுத்துவதுமாகும்.

மேற்கத்தைய மருத்துவத்தில், ஆயுள்வேதம் ஒரு ஈடுசெய் மருத்துவ முறையே அன்றி மேற்கத்திய முறையைப் பதிலீடு செய்யத்தக்க முறை அல்ல என்ற கருத்தும் நிலவுகிறது. – என்றார்.

இந்த வைத்திய முகாமில் சம்மாந்துறை ஆயுள்வேத வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம் ரிப்கா, சமூக வைத்திய அதிகாரி டி.எல். றுமைஸா ஆகியோரால் இலவச வைத்திய சேவைகள் வழங்கப்பட்டன.



### கடற்றொழில் அமைச்சரின் சகாவால்

# தாக்கப்பட்ட மீனவர் சங்கத் தலைவரை நேரடியாக பார்வையிட்ட ரவிகரன் எம்.பி.

### அடாவடித்தனங்களை ஒருபோதும் அனுமதியோம் எனவும் கடுமையாக எச்சரிப்பு

(விஜயரத்தினம் சரவணன்)

கடற்றொழில் அமைச்சர் கடந்த 24 ஆம் திகதி தமது கட்சி சார்ந்த சில உள்ளூர் அதிகாரசபை வேட்பாளர்கள் உள்ளடங்கலாக தமது சகாக்களுடன் முல்லைத்தீவு - கேப்பாப்புலவுப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது, கேப்பாப்புலவு மீனவசங்கத் தலைவர் செபஸ்ரியாம்பிள்ளை சுகிர்தன் கடற்றொழில் அமைச்சருடன் வருகைதந்த ஒருவரால் தாக்கப்பட்டார்.

இந்த நிலையில் இவ்வாறு தாக்கப்பட்ட கேப்பாப்புலவு மீனவசங்கத் தலைவரை வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று (26) நேரடியாகச் சென்று பார்வையிட்டிருந்தார்.

இதன்போது கடற்றொழில் அமைச்சரும் அவருடைய சகாக்களும் மக்களோடு எவ்வாறு அணுகுவது என்பதை முதலில் அறிந்துகொள்ளவேண்டும் எனவும், இவ்வாறான அடாவடிச் செயற்பாடுகளை ஒருபோதும் அனுமதிக்க முடியாது எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் எச்சரித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கேப்பாப்புலவுப் பகுதிக்கு கடந்த 24 ஆம் திகதி கடற்றொழில் அமைச்சர் வருகைதந்தபோது, கேப்பாப்புலவு மீனவசங்கத் தலைவர் செபஸ்தியாம்பிள்ளை சுகிர்தன், அப்பகுதி மீனவர்கள் அதிகளவில் பயன்படுத்தும் வீதி சீரின்றிக் காணப்படுவது தொடர்பிலும்,



அவ்வீதியைச் சீரமைத்துத் தருமாறும் கடற்றொழில் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்போது கடந்த காலத்தில் ஆட்சியிலிருந்த அமைச்சர்கள், ஆட்சியாளர்களும் குறித்த வீதியைச் சீரமைத்துத் தருவதாக தெரிவித்திருந்தும் இதுவரை குறித்த வீதிசீரமைக்கப்படாமல் உள்ளது தொடர்பிலும் மீனவ சங்கத் தலைவர் செபஸ்ரியாம்பிள்ளை சுகிர்தன் கடற்றொழில் அமைச்சருக்குச் சுட்டிக்காடியுள்ளார்.

இதன்போது அமைச்சருடன் வருகை தந்தவர் மீனவர் சங்கத்தலைவரைத் தாக்கியுள்ளார்.

குறித்த சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றேன். கடற்றொழில் அமைச்சரும் அவருடன் வருகைதந்த அவரின் சகாக்களும் முதலில் மக்களுடன் எவ்வாறு அணுகுவது என்பதை அறிந்துகொள்ளவேண்டும்.

இங்கு வருகைதந்து இவ்வாறு அட்டகாசம் செய்த கடற்றொழில் அமைச்சருக்கும், அமைச்சரின் சகாக்களுக்கும் கேப்பாப்புலவு, பிலக்குடியிருப்பு மக்களின் வாழ்கை வரலாறு தெரியாது என்று நினைக்கின்றேன்.

இங்குள்ள மக்கள் எவ்வாறு உறுதியாகவும், திடமாகவும் தமிழ்த் தேசியம் சார்ந்து நிற்பவர்கள் என்பதை சம்மந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைச்சரும், அவருடைய சகாக்களும் தாக்கிவிட்டுச் செல்கலும் அளவுக்குக் கேப்பாப்பிலவு மக்கள் கோழைகள்அல்ல. நாட்டின் கடற்றொழில் அமைச்சர் என்பதற்காக மரியாதை நிமித்தம் இந்தப் பகுதியில் இருந்து அவர்கள் திரும்பிச் செல்ல அனுமதித்திருக்கின்றனர்.

இவ்வாறான அடாவடித்தனங்களுடன் இங்குவந்து செயற்பட முடியாது என்பதை எச்சரிக்கையாகச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

மக்களுடன் மக்கள் பிரதிநிகளாக, உரியமுறையில் மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அணுகவேண்டும். இவ்வாறு அடாவடித்தனமாக செயற்படக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இது தொடர்பில் கடற்றொழில் அமைச்சரிடம் பேசுவதுடன், அதற்கு மேலாக ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட தரப்பினருக்கும் தெரியப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கையும் மேற்கொள்வேன்.

முல்லைத்தீவுக்கு வருகைதந்து இவ்வாறு அடாவடித்தனமாகச் செயற்படுவதை ஒருபோதும் அனுமதிக்கமாடடோம் என்பதை எச்சரிக்கையாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். - என்றார்.

# இடமாற்றங்கள் வழங்கினால் நடைமுறைப்படுத்த வேண்டும்



### ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

(வாஸ் கூஞ்ஞ)

ஊழல் இடம்பெறக் கூடாது என்பதற்காகத்தான் குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தடவை இடமாற்றங்கள் வழங்கப்படுகின்றன. அவ்வாறான இடமாற்ற உத்தரவுகள் வழங்கப்பட்டால் அதைப் பின்பற்ற வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், மருத்துவமனை அத்தியட்சகர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் அண்மையில் இடம் பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊழல் இடம்பெறக் கூடாது என்பதற்காகத்தான் குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தடவை இடமாற்றங்கள் வழங்கப்படுகின்றன.

அவ்வாறான இடமாற்ற உத்தரவுகள் வழங்கப்பட்டால் அதைப் பின்பற்ற வேண்டும். குறிப்பாகச் சுகாதாரத் திணைக்களத்தின் கீழான சாரதிகளுக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கப்படவில்லை.- என்றார்.

இந்த விடயத்தை வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவனும் ஆதரித்துக் கருத்துத் தெரிவித்தார்.

மருத்துவர்கள் மற்றும் மருத்துவ நிர்வாகிகளுக்கான வெளிநாட்டுப் பயண விடுமுறைக்கான அனுமதி ஒழுங்குபடுத்தல், முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை விடுதிக்கான கட்டடத்தின் தேவைப்பாடு, வடக்கு மாகாண மருத்துவத்துறையிலுள்ள ஆளணி வெற்றிடங்களை நிரப்புதல் மற்றும் ஆளணி மறுசீரமைப்பு, மருத்துவமனை பணியாளர்களின் பாதுகாப்பு உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டு அதற்குரிய தீர்வுகளும் இதன்போது கண்டறியப்பட்டன.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலர் திருமதி ப.ஜெயராணி பல்வேறு விடயங்களைச் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், மாவட்ட மருத்துவ மனைகளின் பணிப்பாளர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

# தமிழ், முஸ்லிம், சிங்களம் என்று பல கட்சிகள்: மக்களை சமனாக நடத்தினால் தேவையில்லை!

## பொறுப்பு அரசுக்கு இருக்கிறது என்கிறார் சத்தியலிங்கம்

(கி.வசந்தன்)

மூவின மக்களும் இந்த நாட்டில் எப்போது சமமாக மதிக்கப்படுகின்றார்களோ அன்றுதான் தமிழ்க் கட்சி சிங்களக் கட்சி, முஸ்லிம் கட்சி என்ற தேவை இருக்காது. அந்த நிலையை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று (26) இடம்பெற்ற தந்தை செல்வ நாயகத்தின் நினைவுதின நிகழ்வில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

மோகம் 30 நாள் என்று சொல்வார்கள். அந்த மோகத்தில் வந்த ஒரு கட்சி, தாங்கள்தான் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுடைய ஒட்டு மொத்த பிரதிநிதிகள் என்று சொல்கிறார்கள். ஒரு தேர்தலில் வென்றுவிட்டு அப்படிச் சொல்ல முடியாது. இந்தத் தேர்தல் முறையால் மாத்திரமே அவர்கள் வென்றார்களே தவிர, ஒட்டுமொத்த தமிழ் மக்களின்



மனங்களையும் கவர்ந்து வெல்லவில்லை.

இந்த நாட்டில் மாற்றம் ஒன்று ஏற்பட வேண்டும் என்று இலங்கை மக்கள் விரும்பினார்கள். இந்த நாட்டை தொடர்ச்சியாக ஆண்டவர்கள் நாட்டின் தேசிய வளங்களை பயன்படுத்தி நாட்டு மக்களைப் பிச்சைக்காரர் ஆக்கினார்கள். எனவே மக்கள் மாற்றம் ஒன்றை விரும்பி இந்த அரசைக் கொண்டு வந்தார்கள். அந்த மாற்றத்தை நாங்களும் எதிர்பார்க்கின்றோம்.

இந்த நாடானது ஊழற்ற சிறந்த நிர்வாகத்தைக் கொண்ட, கொள்ளையடிக்காதவர்களை கொண்ட ஒரு அரசாக இருக்க வேண்டும் என்பது ஒட்டு மொத்த இலங்கை மக்களின் அவா. அந்த விருப்பம் எமக்கும் இருக்கிறது. தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்று சேர்ந்து இந்த நாட்டை நிர்வகிக்க முடியாது. நாங்கள் எண்ணிக்கையில் சிறுபான்மையாக இருக்கிறோம்.

தமிழ் மக்களின் பிரச்சினை நீண்ட காலப் பிரச்சினை. எனவே தமிழ் தேசியப் பிரச்சினையைத் தீர்க்க யார் முன் வருகின்றார்களோ அவர்களுடன் இணைந்து பயணிக்க நாம் தயாராக இருக்கிறோம்.

ஆனால், இந்த அரசு தெரிவு செய்யப்பட்ட ஆறு மாதங்களிலேயே அவர்களது பயணம் வித்தியாசமாக இருக்கிறது.

மூவின மக்களும் இந்த நாட்டில் எப்போது சமமாக மதிக்கப்படுகின்றார்களோ அன்று தமிழ்க் கட்சி, சிங்களகட்சி, முஸ்லிம் கட்சி என்ற தேவை இருக்காது. அந்த நிலையை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது. அதனை நம்பியே மக்கள் வாக்களித்தனர். எனவே குறுகிய நோக்கத்துக்காக மக்களை நீங்கள் ஏமாற்றினால் இந்த நாடு ஒரு நாளும் மீட்சியடையாது.- என்றார்.





# யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில் நடந்த இரத்ததானம்

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில் அரியாலை சனசமூக நிலையத்தில் இரத்ததான முகாம் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் இரத்த வகைகளுக்கு காணப்படும் தட்டுப்பாட்டை அடுத்து இந்த இரத்ததான முகாம் ஒழுங்கு செய்யப்பட்டது.

இரத்ததான முகாமில் பலரும் கலந்துகொண்டு உயிர் காக்கும் பணிக்கு உதவினர்.









# நாவுக்கரசரின் சித்திரைச்சதய குரு பூஜை!

**(வி.ரி.சகாதேவராஜா)**

அம்பாறை மாவட்ட திருக்கோவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தில் அப்பர் பெருமானின் சித்திரைச் சதய குரு பூசை தினமும் பாராட்டு விழாவும் இடம்பெற்றன.

குருகுலப் பணிப்பாளர் கண. இராசரெத்தினம் தலைமையில் நடைபெற்ற விழாவில் திருக்கோவில் பிரதேசத்தில் குருகுலத்தால் நடத்தப்படும் அறநெறி பாடசாலைகள் கலந்துகொண்டன.

இந்த நிகழ்வில் குருகுல குருமார்களும் கலந்து ஆசி வழங்கினர்.

ஆறுமுக கிருபாகர குருக்கள், பிருதுவிந்த சர்மா ஆகியோரும் திருக்கோவில் பிரதேச செயலக இந்து கலாசாரஅபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நிஷாந்தி தேவராஜனும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் விநாயகபுரம் முத்துமாரியம்மன் ஆலய அறங்காவலர் சபையினரும் அறநெறி பாடசாலை மணவர்கள் கலந்துகொண்டு பேச்சு கவிதை, வினா விடை என்பவற்றை நிகழ்த்தினர்.

அவர்களுக்கான பரிசுகள் குருகுலத்தால் வழங்கப்பட்டன.

குரு பூஜையின்போது, திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தில் 47 ஆண்டுகளுக்கு மேலாக பொதுச் செயலாளராக கடமையாற்றிய, கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையில் உப அதிபராக கடமையாற்றி ஓய்வு பெற்ற பா. சந்திரேஸ்வரன், குருகுல நிர்வாகத்தினராலும் முத்துமாரியம்மன் பாடசாலை மற்றும் முத்து மாரியம்மன் ஆலய அறங்காவலர்களாலும் வாழ்த்தி கௌரவிக்கப்பட்டார்.

# திக்கம் வடிசாலை தொடர்பில் கூறப்படுவது அப்பட்டமான பொய்!

## குற்றஞ்சாட்டுகிறது ஈ.பி.டிபி.

**(எஸ். நிதர்ஷன்)**

திக்கம் வடிசாலை தொடர்பாக சொல்லப்படுவது அப்பட்டமான பொய் என்று தெரிவித்துள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந் பன்னீர்செல்வம், அரசியல் நோக்கங்களுக்காகத் திட்டமிட்டுத் தவறான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தெரிவித்தார்.

யாழ். ஊடக மையத்தில் நேற்று (26) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

திக்கம் வடிசாலையை வெளிநாட்டு தனியார் நிறுவனத்திடம் கையளிப்பதற்கான ஒப்பந்தத்துடன் எமது செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தாவையும் சம்மந்தப்படுத்தும் வகையில் சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

உண்மையில், பனை அபிவிருத்தி சபையுடன் சம்மந்தப்பட்டவர்களால் அவ்வாறான தகவல் வெளிப்படுத்தப்பட்டிருப்பின், அதில் எந்தவித உண்மையும் இல்லை என்பதை பொறுப்புடன் கூறவிரும்புகின்றோம்.

உண்மையில், கடந்த அரசின் காலத்தில் கைத்தொழில் சார்ந்த துறைசார் அமைசுக்கும் குறித்த வெளிநாட்டு நிறுவனத்துக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தவிடாமல் தடுத்து வைத்திருந்தவர் எமது செயலாளர் நாயகம்தான் என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

இல்லாது போயிருந்தால், திக்கம் வடிசாலையை குறித்த நிறுவனம் பொறுப்பெடுத்து தமது செயற்பாடுகளை ஆரம்பித்திருக்கும்.

தோழர் டக்ளஸ் தேவானந்தாவைப் பொறுத்தவரையில், எமது வளங்கள் – எமது தனித்துவ அடையாளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் உணர்வு பூர்வமாக உறுதியான நிலைப்பாட்டை உடையவர்.

அதன் அடிப்படையில் திக்கம் வடிசாலை வெளிநாட்டு நிறுவனத்தின் கைகளுக்குச் செல்லுமாயின், அதனால் கிடைக்கும் வருமானத்தின் கணிசமான பகுதி அவர்களால் எடுத்துச் செல்லப்பட்டுவிடும். அத்துடன், வருமான நோக்கங்களுக்காக முதலீட்டாளர்களால் எமது பிரதேச உற்பத்திகளின் தனித்தவத்திலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் அபாயம் இருந்தது. இதனை உணர்ந்துகொண்டு, திக்கம் வடிசாலை எமது பிரதேசங்களை சேர்ந்த துறைசார் சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டு வடிசாலை செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கான ஒத்தாசைகளை வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருந்து வருகிறார்.

அதன் அடிப்படையில் கடந்த அரசின் காலத்தில் வெளிநாட்டு நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை இரத்து செய்வதற்கான புறச்சூழல்களை உருவாக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் கடந்த வருடம் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருந்தது.

இருந்தபோதிலும், ஜனாதிபதியாக அநுரகுமார திசாநாயக்கா தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவரை சந்தித்த எமது செயலாளர் நாயகம், கடந்த அரசில் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்ட நிலையில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பான பட்டியலை ஜனாதிபதியிடம் கையளித்திருந்தார். அந்த பட்டியலில் திக்கம் வடிசாலை விவகாரமும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் திக்கம் வடிசாலை விவகாரத்தில் எமது செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தாவைத் தவறான முறையில் சம்மந்தப்படுத்துகின்றனர் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

துறைசார் அமைச்சால் உரிய நியமங்களை பின்பற்றி செய்யப்பட்ட ஒப்பந்தம் ஒன்றை பனை அபிவிருத்தி சபை பணிப்பாளர் சபையின் தீர்மானத்தால் இரத்து செய்ய முடியும் என்பதும் மக்களை ஏமாற்றும் கருத்தாகவே இருக்கின்றது.– என்றார்.

# ஓட்டோ உரிமையாளர்களுக்கு ரயர் வழங்கினார் தொழிலதிபர்

(றிபாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கு உட்பட்ட ஓட்டோ உரிமையாளர்களுக்கு ரயர்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

தொழிலதிபரும், சமூக செயற்பாட்டாளருமான ஏ.கே.அமீர் சொந்த நிதியில், தெரிவு செய்யப்பட்ட ஓட்டோ சாரதிகளுக்கு ரயர்களை வழங்கி வைத்தார்.

கடந்த காலங்களில் இப்பிராந்தியத்தில் பல்வேறுபட்ட சமூக சேவைகளையும், வாழ்வாதார திட்டங்களையும் முன்னெடுத்து செயற்பட்டதுடன் ஏழை, எளிய மக்களுக்கும் தன்னால் முடியுமான உதவிகளை செய்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.








# மறைந்த பாப்பரசருக்கு நேற்று கல்முனை பற்றிமாவில் அஞ்சலி!

(வி.ரி. சகாதேவராஜா)

மறைந்த பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ்ஸ்'க்கான அஞ்சலி செலுத்தும் நிகழ்வு கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியில் கல்லூரி அதிபர் அருட். சகோ. எஸ்.ஈ. றெஜினோல்ட் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

மனிதநேயம்மிக்க ஒரு தலைவருக்கு கல்லூரியில் அஞ்சலி நிகழ்வு ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகளில் இடம்பெற்றது. கல்லூரி கொடி அரைக்கம்பத்தில் ஏற்றப்பட்டு, ஆசிரியர்கள், கல்வி சாரா உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்களால் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

கல்லூரி அதிபர் அருட். சகோ. எஸ்.ஈ. றெஜினோல்ட் இரங்கல் உரை நிகழ்த்தினார்.










# தீர்க்கப்படாத காஷ்மீர் பிணக்கு: மீளும் இந்திய - பாகிஸ்தான் முறுகல்!

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா.**

*(காஷ்மீர் காஷ்மீரிகளுக்கு மட்டுமே சொந்தம் என்பதே அங்கு வாழும் மக்களின் அடிப்படை உரிமைக் குரலாக இருக்கிறது. காலங் கடந்தும் தீராத பதில் ஒன்றுதான். அதுவே காஷ்மீர் இந்தியாவுக்கும் இல்லை, பாகிஸ்தானுக்கும் இல்லை. வரலாற்று உண்மையாக இருவருக்கும் சொந்தமில்லை. காஷ்மீர் காஷ்மீரிகளுக்கு மட்டுமே சொந்தம் என்பதே யதார்த்தமாகிறது.)*

தெற்குக் காஷ்மீரில் உள்ள பஹல்காமில் கடந்த 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று நடந்த கொடூர தாக்குதலில் சுமார் 25 சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்தனர்.

**பஹல்காமில் கொடூரத் தாக்குதல்**

சுற்றுலா தலமாக விளங்கும் பஹல்காமில் நடந்த தாக்குதல் பலரையும் அதிர்ச்சி அடைய செய்துள்ளது. அண்மைய ஆண்டுகளில் பொது மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இது மிகப் பெரிய கொடுமை என ஜம்மு காஷ்மீர் மாநில முதல்வர் உமர் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

பஹல்காமின் பைசரன் பள்ளத்தாக்கு காடுகள், தெளிவான நீர் நிறைந்த ஏரிகள், பரந்த புல்வெளிகளுக்கு பெயர்பெற்ற இந்த பகுதிக்கு கால்நடையாகவோ அல்லது குதிரை மூலமாகவோ மட்டுமே செல்ல முடியும். இங்கு சென்ற சுற்றுலாப் பயணிகளை நெருக்கமாக நிறுத்தி துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

சுற்றுலாப் பயணிகள் மீது நடத்தப்பட்ட இந்தக் கொடிய தாக்குதலுக்கு பாகிஸ்தானைத் தளமாகக் கொண்ட அமைப்பான லஷ்கர்-இ-தொய்பாவின் நிழல் அமைப்பான ரெசிஸ்டன்ஸ் ஃப்ரண்ட் பொறுப்பேற்றுள்ளது.

அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கும் இந்த தருணத்தில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது ஒரு திட்டமிட்ட தாக்குதலாகவும் கருதப்படுகிறது.

**இந்தியா ராணுவ நடவடிக்கை?**

இந்தத் தாக்குதலை யார் செய்தார்கள் என்பதை இந்தியா தீர்மானித்த பிறகு, பதிலடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. ஆனாலும் எதிர்வரும் வாரங்களில் பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா ராணுவ நடவடிக்கை எடுக்கக் கூடும் என்று பாகிஸ்தான் முன்னணி பத்திரிகையாளர் தெரிவித்துள்ளார்.

இந்தியா ராணுவ நடவடிக்கை மே மாதத்தின் கடைசி வாரத்தில் எடுக்க 60 சதவீத வாய்ப்பு உள்ளது என்றும் மற்றொரு ஊடகவியலாளர் குறிப்பிட்டுள்ளார்.



காஷ்மீர் சகோதரர்களின் போராட்டத்தை மறக்க முடியாது என ஒரு வாரத்துக்கு முன்பு பாகிஸ்தான் ராணுவத் தலைவர் ஜெனரல் முனீர் தெரிவித்த கருத்து வெளியானதன் பின்னர் இந்தக் கோர நிகழ்வு நடந்துள்ளது.

**காஷ்மீர் காஷ்மீரிகளுக்கே!**

காஷ்மீர் காஷ்மீரிகளுக்கு மட்டுமே சொந்தம் என்பதே அங்கு வாழும் மக்களின் அடிப்படை உரிமைக் குரலாக இருக்கிறது. காலங் கடந்தும் தீராத பதில் ஒன்று தான். அதுவே காஷ்மீர் இந்தியாவுக்கும் இல்லை, பாகிஸ்தானுக்கும் இல்லை. வரலாற்று உண்மையாக இருவருக்கும் சொந்தமில்லை, காஷ்மீர் காஷ்மீரிகளுக்கு மட்டுமே சொந்தம் என்பதே யதார்த்தமாகிறது.

வரலாற்று ரீதியில் இந்தியா சுதந்திரம் அடைந்ததும் இந்திய நிலப்பரப்பில் அடங்கி இருந்த சமஸ்தனங்கள் இந்தியாவோடும், பாகிஸ்தான் நிலப்பரப்பில் அமைந்த சமஸ்தானங்கள் பாகிஸ்தானோடும் இணைந்தன.

புவியியல் ரீதியாக இரண்டில் இருந்தும் ஒதுங்கி இருந்த காஷ்மீர் தனி நாடாகவே இருந்து விட்டது. மக்கள் தொகையில் பெரும்பாலானோர் முஸ்லீம்களாகவும் மன்னர் இந்துவாகவும் இருந்தும் கூட எந்தப் பிணக்கும் அங்கு பாரிய அளவில் அக்காலத்தில் ஏற்படவில்லை.

பாகிஸ்தான் பேராசைப்பட்டது போல காஷ்மீர மக்கள் முஸ்லீம்கள் என்பதால் தாங்கள் படையெடுத்துச் சென்றால் நம்மை ஆதரிப்பார்கள் என்று தப்பு கணக்கு போட்டு, பாகிஸ்தான் உள்ளே நுழைய நாட்டைக் காக்க மன்னர் ராம்சிங் இந்திய ராணுவத்தின் உதவியை நாடினார்.

**காஷ்மீரின் தொடர் பிணக்கு**

1947 பிரிவினையின் போது பாகிஸ்தான் ஆக்கிரமித்த பகுதியை பாகிஸ்தான் எடுத்துக் கொள்ள,

**தொடர்ச்சி▼**




# தீர்க்கப்படாத காஷ்மீர் பிணக்கு: மீளும் இந்திய - பாகிஸ்தான் முறுகல்!

**தொடர்ச்சி▲**

இந்தியப் படைகள் நுழைந்த பிறகு மிஞ்சிய பகுதிகளை இந்தியா இணைத்துக் கொண்டது. அன்று பிடித்தது அந்த நிலப்பரப்புக்கும் காஷ்மீர் மக்களுக்கும் தீராத வலி.

1940களின் இறுதியில் காஷ்மீரை இந்தியாவோடு இணைத்த போது நேரு அப்போது சில உரிமைகளை அரசியல் சாசனப் பிரிவிலேயே எழுதிக் குடுத்தார். ஆனால் அவைதான் தற்போது நீக்கப்பட்டு இருக்கின்றன.

இந்தியாவும், பாகிஸ்தானும் சுதந்திரம் பெற்றது முதல் தீர்க்கப்படாத பிரச்சினையாக காஷ்மீர் விவகாரம் இருந்து வருகிறது. நிலப்பகுதிகள் ஆக்கிரமிப்பு, அதனைத் தொடர்ந்து போர் அல்லது ராணுவ நடவடிக்கை நடைபெறுவதும் காஷ்மீரில் தொடர்ந்து நடந்து வருகிறது. இந்த விவகாரத்துக்காக இந்தியாவும், பாகிஸ்தானும் ஐ.நாவரை சென்று குரல் எழுப்பிய வரலாறும் தொடர்ந்து நடந்து வந்துள்ளது.

**பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு**

1947 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பாகிஸ்தான் பழங்குடி மக்களைக் கொண்ட படை காஷ்மீருக்குள் நுழைந்தது. தற்போதைய பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியை வளைத்தது. பாகிஸ்தான் ராணுவம் பின்புலத்தில் இருந்து செயற்பட்டது.

வேறு வழியில்லாத சூழலில் மன்னர் ஹரி சிங், இந்தியாவிடம் ராணுவ உதவி கோரினார். காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்க அவர் சம்மதித்தார். அப்போது பிரதமர் ஜவஹர்லால் நேரு மற்றும் மன்னர் ஹரி சிங் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது.

காஷ்மீர் இந்தியாவுடன் இணைய ஒப்புக் கொண்டது. அதன் பாதுகாப்புக்கு இந்தியா முழு பொறுப்பேற்றது. இருப்பினும் பாகிஸ்தான் காஷ்மீரின் குறிப்பிட்ட பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டதால் நேரு, ஐ.நாவிடம் முறையிட்டார்.

இதனைத் தொடர்ந்து ஐ.நா. சபையின் தீர்மானத்தின்படி பாகிஸ்தான் படைகளும் தங்கள் பகுதிக்குள் இருக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தற்போதைய நிலையில் கட்டுப்பாட்டுக் கோடு உருவாக்கப்பட்டது. இன்றளவும் அதுவே காஷ்மீரின் பாகிஸ்தானுடனான தார்மீக எல்லையாக இருந்து வருகிறது.

**1962 இந்தியா - பாக். போர்**

இந்தக் காரணத்தை முன்வைத்தே இரு நாடுகள்




இடையே போர்களும் நடந்துள்ளன. 1962 ஆம் ஆண்டு முதல் இந்தியா – பாக். போர் மூன்று தடவைகள் நடந்துள்ளன.

1989 ஆம் ஆண்டுக்குப் பிறகு காஷ்மீரில் தீவிரவாதம் புதிய வடிவத்தை எடுத்தது. காஷ்மீர் தீவிரவாதமும், அதனைத் தூண்டிவிடும் பாகிஸ்தானும் இன்றளவும் இந்தியாவுக்குப் பெரிய தலைவலியாக இருந்து வருகிறது என்று மத்திய அரசு குற்றஞ்சாட்டி வருகிறது.

அரசியல் ரீதியாக காஷ்மீர் பல துண்டுகளாகி விட்டன. தேசிய மாநாட்டுக் கட்சி மட்டுமின்றி மக்கள் ஜனநாயக கட்சியும் காஷ்மீர் பள்ளத்தாக்கு மக்களின் கட்சியாக விளங்குகிறது. பா.ஜ.கவும், காங்கிரஸும் ஜம்மு பகுதியை பிரதிநிதித்துவப் படுத்த மத முரண்பாட்டை பயன்படுத்துவதுடன், அரசியல் மட்டுமின்றி பிரிவினைவாதம், தீவிரவாதம் என பல வடிவங்களைக் கொண்ட சிக்கல் நிறைந்த பிரச்சினை யாக காஷ்மீர் உருவெடுத்துள்ளது.

**காஷ்மீர் காஷ்மீரிகளுக்கு சொந்தம்!**

ஆயினும் காஷ்மீரிகள் பல்லாண்டுகளாக தொடரும் அடக்குமுறைகளின் மத்தியிலும், இன்னமும் தங்கள் சுய அடையாளத்தை இழக்கவில்லை. அவர்களைப் பொறுத்தளவில் அவர்கள் இந்தியரும் அல்ல. பாகிஸ்தானியரும் அல்ல. அவர்கள் காஷ்மீரிகள். இந்த இரு நாட்டுக்கும் சொந்தமில்லை, காஷ்மீர் காஷ்மீரிகளுக்கு மட்டுமே சொந்தம் என்பதே உண்மை.

காலங்கடந்தும் தீராத பதில் ஒன்று தான். அதுவே இந்தியாவுக்கா அன்றில் இல்லை பாகிஸ்தானுக்கோ இல்லை. வரலாற்று உண்மையாக இருவருக்கும் சொந்தமில்லை, காஷ்மீர் காஷ்மீரிகளுக்கு மட்டுமே சொந்தம் என்பதே யதார்த்தமாகிறது.



# கள்ளியடி அ. த. க. மாணவர் சின்னம் சூட்டும் நிகழ்வுகள்

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் மடு கல்வி வலயத்துக்கு உட்பட்ட கள்ளியடி அ. த. க. பாடசாலையின் 2025 ஆம் ஆண்டுக்கான மாணவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு பாடசாலை பொது மண்டபத்தில் பாடசாலையின் அதிபர் இ. லோறன்ஸ் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரித்தானியாவை சேர்ந்த கள்ளியடி மக்கள் அமைப்பின் இணைப்பாளர் முத்துலிங்கம் விஜிதன், சிறப்பு விருந்தினர்களாக வெள்ளாங்குளம் பாடசாலை அதிபர் சாந்தரூபன், தேவன்பிட்டி றோ.க.த.ம.வி. அதிபர் விஜிதரன், கணேசபுரம் ஆரம்ப பாடசாலை அதிபர் தயாபரன் மற்றும் ஓபின் நிறுவன ஊழியர் திருமதி யான்சி மற்றும் சிவானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கள்ளியடி பாடசாலையின் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களும் கலந்து கொண்டு மாணவர்களுக்கான சின்னங்களைச் சூட்டி வைத்திருந்தனர்.



கள்ளியடி பாடசாலை அண்மைக் காலங்களாக பழைய மாணவர்கள் மற்றும் உள்ளூர் கிராம மக்கள் மற்றும் புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் பல்வேறு துறைகளிலும் வளர்ச்சியடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.






# சம்மாந்துறை பிரதேச இரு வீதிகளுக்கு ஒரு கோடி ரூபா செலவில் கொங்கிறீட்!

## முன்னாள் எம்.பி. ஹரீஸ் முன்னெடுப்பு

(நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறை மக்களின் நீண்ட நாள் பிரச்சினைக இருந்த குண்டும், குழியுமாக பாவனைக்கு பொருத்தமற்றதாகப் பல வருடங்களாக இருந்த இரு வீதிகள் செப்பனிட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் பி – 100 திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்த சுமார் 05 மில்லியன் ரூபா விசேட நிதி மூலம் கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட சம்மாந்துறை மல்கம்பிட்டி மூன்றாம் குறுக்கு வீதி நிறைவு பணிகளைகள விஜயம் செய்து முன்னார் எம்.பி. ஹரீஸ் பார்வையிட்டார்.

இதனை தொடர்ந்து விவசாயிகளதும், மக்களதும் பாவனைக்கு உகந்த வகையில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் பி – 100 திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட சுமார் 05 மில்லியன் ரூபா விசேட நிதி ஒதுக்கீட்டின் மூலம் கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட சம்மாந்துறை கிடா முல்லை ஆற்று வீதி நிறைவு பணிகளையும் பார்வையிட்டார்.



இதன்போது விவசாயிகளைச் சந்தித்து விவசாய நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடினார்.

கடந்த பெருவெள்ளத்தில் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்ட போதும், வடிகாலமைப்பு, நீர்ப்பாசன குளங்கள் சேதமான போதும் முன்னார் எம்.பி. ஹரீஸ் முன்னெடுத்த வேலைத் திட்டங்களுக்கு விவசாயிகள் நன்றி தெரிவித்தனர். வீதி அபிவிருத்திக்கும் தமது பாராட்டுக்களை தெரிவித்தனர்.






# ஸதகா புல்லட்டின் நிறுவனத்தால் இறக்காமம் மக்களுக்கு வீடமைப்பு

**(நூருல் ஹுதா உமர்)**

தேசிய ரீதியாக பல்வேறு சமூகப் பணிகளை செய்துவரும் ஸதகா புல்லட்டின் சமூக நல நிதியத்தால் அம்பாறை மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத இறக்காமம் அரபா நகர், கொக்குலான் கல் மக்களுக்கு வீடுகள் அமைக்க அடிக்கல் நடப்பட்டது.

ஸதகா புல்லட்டின் மற்றும் பெமிலி ரிலீப் நிறுவனங்களின் பிரதிநிதியும் பொறியியலாளருமான எம்.சி.கமால் நிஷாத்தின் நெறிப்படுத்தலிலும், தலைமையிலும் நடைபெற்ற இந்த நிகழ்வில் தகரக் கொட்டில்களில் உள்ள மக்களின் கஷ்டங்களை போக்கும் நோக்கில் மூன்று வீடுகளுக்கான அடிக்கல் நடப்பட்டது.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது கல்முனை அல்-ஹிலால் வித்தியாலய அதிபர் யூ.எல்.நசார், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினர் யூ.எல்.என். ஹுதா, ஆசிரியர் சிப்லி சம்சுதீன், பள்ளிவாசல் தலைவர், ஊர் மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

ஸதகா புல்லட்டின் மற்றும் பெமிலி ரிலீப் நிறுவனங்களின் உதவியுடன் தொடர்ந்தும் இந்த பிரதேச மக்களுக்கு பொறியியலாளர் எம்.சி.கமால் நிஷாத் பல்வேறு சமூக பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்டம் இறக்காமம் பிரதேச செயலக நிர்வாகத்தின் கீழ் உள்ள அடிப்படை வசதிகள் எதுவுமில்லாத இந்த அரபா நகர், கொக்குலான் கல் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சொல்லிலடங்காதவை.

இந்தப் பகுதி மக்களுக்கு மலசல கூட வசதி, மின்சார வசதி, வீதி அபிவிருத்தி, தெருவிளக்கு, மாலை வேளைகளில் உள்ள பாம்பு தொல்லை, யானைகளின் அட்டகாசம் எனப் பல்வேறு வகையான பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய அவசியம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஹைதராபாத்தில் உள்ள 213 பாகிஸ்தானியர்கள் உடனடியாக வெளியேறவேண்டுமென உத்தரவு

தெலுங்கானா மாநில தலைநகர் ஹைதராபாத்தில் உள்ள 213 பாகிஸ்தானியர்களும் இன்று இரவுக்குள் பாகிஸ்தான் திரும்ப வேண்டும் என ஹைதராபாத் டி.ஜி.பி. அலுவலகத்திலிருந்து உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

மத்திய உள்துறை அமைச்சக உத்தரவின் பேரில், இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக டி.ஜி.பி. அலுவலகம் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

ஹைதராபாத் நகரில் 213 பாகிஸ்தானியர்கள் உள்ளனர். இவர்களில் சிலர் சுற்றுலா விசா, சிலர் மருத்துவ விசாக் களிலும் வந்து தங்கி உள்ளனர். இவர்களின் விசாக்கள் ரத்து செய்யப்பட்டு விட்டதால், இன்று இரவுக்குள் இந்தி யாவை விட்டு வெளியேற வேண்டும் என டி.ஜி.பி. அலுவலகத்தில் இருந்து அந்த 213 பேருக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



இதில் தற்போது வெறும் 4 குடும்பத்தினர் மட்டுமே ஹைதராபாத்தில் தங்கி உள்ளனர். இவர்களும் இன்று இரவுக்குள் பாகிஸ்தான் செல்ல வேண்டுமென உத்தர விடப்பட்டுள்ளது.

# இந்தியாவில் தங்கியிருக்க அனுமதி வேண்டும்: பாகிஸ்தான் பெண் சீமா ஹைதர் கோரிக்கை

மத்திய அரசின் சமீபத்திய நடவ டிக்கைகளால் அச்சமடைந்துள்ள பாகிஸ்தான் பெண் சீமா ஹைதர், நான் இந்தியாவின் மருமகள், என்னை இங்கேயே இருக்க அனும திக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த 2023, ஜூலையில் தலைப்புச் செய்திகளில் இடம்பிடித்தவர் சீமா ஹைதர். பாகிஸ்தானின் சிந்து மாகா ணம், கராச்சி நகரை சேர்ந்த இவர் தனது இந்திய காதலர் சச்சின் மீனாவை திருமணம் செய்துகொள்வ தற்காக பாகிஸ்தானை விட்டு வெளி யேறினார். ஏற்கெனவே திருமணமான சீமா ஹைதர், 4 குழந்தைகளுக்கு தாய் ஆவார்.

இந்நிலையில் தனது 4 குழந் தைகளுடன் நேபாளம் வழியாக சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்தார். உத்தர பிரதேசத்தின் கவுதம புத்தர் நகர் மாவட்டம், ரபுபுரா பகுதியில் தனது காதலர் சச்சின் மீனாவுடன் வசித்து வந்தார். இந் நிலையில் அவரை கடந்த 2023 ஜூலையில் அதிகாரிகள் பிடித்தனர்.



தற் போது உத்தர பிரதேசத்தின் கிரேட்டர் நொய்டாவில் சச்சினுடன் சீமா வசித்து வருகிறார்.

இந்நிலையில் பஹல்காம் தாக்கு தலை தொடர்ந்து பாகிஸ்தானியர்க ளுக்கு வழங்கப்பட்ட விசாக்களை ஏப்ரல் 27 முதல் மத்திய அரசு ரத்து செய்துள்ளது. இந்தியாவில் இருக்கும் பாகிஸ்தானியர்கள் அனைவரும் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதனால் நாடு கடத்தப்படலாம் என சீமா அச்சம் அடைந்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள காணொலி பதிவு ஒன்றில், “நான் பாகிஸ்தான் மகள். ஆனால் இப்போது இந்தியாவின் மருமகள். நான் பாகிஸ்தான் செல்ல விரும்பவில்லை. நான் இந்தியாவி லேயே இருக்க அனுமதிக்க வேண்டும் என பிரதமர் மோடி மற்றும் உத்தர பிரதேச முதல்வர் யோகியை வேண் டுகிறேன்.” என்று கூறியுள்ளார். மீனாவை மணந்த பிறகு தான் இந்து மதத்தை ஏற்றுக்கொண்டதாக சீமா கூறுகிறார்.

இந்நிலையில் சீமா தொடர்ந்து இந்தியாவில் வசிக்க அனுமதிக்கப் டுவார் என அவரது வழக்கறிஞர் ஏ.பி.சிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், “சீமா இனி பாகிஸ்தான் குடிமகள் அல்ல. அவர் கிரேட்டர் நொய்டாவில் வசிக்கும் சச்சின் மீனாவை மணந்தார். சமீபத்தில் அவர்களுக்கு பாரதி மீனா என்ற மகள் பிறந்தாள். சீமாவின் குடியுரிமை தற்போது அவரது இந்திய கணவருடன் இணைக்கப்பட்டுள்ளது. எனவே மத்திய அரசின் உத்தரவை சீமா விவகாரத்துடன் பொருத்திப் பார்க்க கூடாது.” என்றார்.

# பஹல்காம் தாக்குதல் குறித்து விவாதிக்க நாடாளுமன்ற கூட்டம் நடத்த தீர்மானம்

பஹல்காம் தாக்குதல் குறித்து விவாதிக்க நாடா ளுமன்ற சிறப்பு கூட்டத்தை நடத்த மத்திய அரசு திட்ட மிட்டுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் 26 சுற்றுலா பயணிகள் உயிரிழந்தனர். இந்த தாக்குதல் குறித்து விவாதிக்க நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தை நடத்த வேண்டும் என்று பல்வேறு கட்சிகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இதுதொடர்பாக முன்னாள் மத்திய அமைச்சரும் மாநிலங்களவை எம்.பியுமான கபில் சிபல் குறிப்பி டுகையில்,

“ பஹல்காம் தாக்குதல் விவகாரத்தில் அனைத்து எதிர்க்கட்சிகளும் மத்திய அரசோடு இணைந்து செயல் படுகின்றன. இந்த சூழலில் தீவிரவாத தாக்குதல் குறித்து விவாதித்து, கண்டன தீர்மானத்தை நிறைவேற்ற நாடா



ளுமன்ற சிறப்பு கூட்டத்தை நடத்த வேண்டும்.

தீவிரவாதத்துக்கு எதிரான போரில் அமெரிக்காவின் அணுகுமுறையை நாமும் பின்பற்ற வேண்டும். தீவிர வாதத்தை ஆதரிக்கும் பாகிஸ்தானோடு வர்த்தகத்தில் ஈடுபடும் நாடுகளுக்கு இந்தியாவில் இடமில்லை என்று பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். சர்வதேச அரங்கில் பாகிஸ்தானை தனிமைப்படுத்த வேண்டும். ” என்றார்.

# ஈரான் துறைமுக வெடிப்புச் சம்பவம்; பலி எண்ணிக்கை 14 ஆக அதிகரிப்பு





ஈரானின் தெற்கு பகுதியில் உள்ள பந்தர் அப்பாஸ் துறைமுகத்தில் நேற்று ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14 ஆக அதிகரித்துள்ளது.

அந்த நாட்டின் ஊடக அறிக்கையின்படி, 750 பேர் காயமடைந்துள்ளனர் என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எளிதில் தீப்பற்றக்கூடிய பொருள்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்த கொள்கலன் தொகுதியில் இந்த தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

தீப்பரவல் காரணமாக, குறித்த பகுதியில் உள்ள பல கட்டடங்கள் மற்றும் வாகனங்கள் சேதமடைந்துள்ளன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.





# நல்லடக்கம் செய்யப்பட்ட போப் பிரான்சிஸின் உடல்

## 2.5 லட்சம் பேர் இறுதி அஞ்சலி

மறைந்த பாப்பரசர் பிரான்சிஸின் உடல் ரோம் தேவாலயத்திற்குள் நேற்று நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இத்தாலியின் தலைநகரான ரோமில் உள்ள சாண்டா மரியா மாகியோர் பசிலிக்காவில் 30 நிமிட ஆராதனைகளுக்கு பின்னர் அவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டதாக வத்திக்கான் தெரிவித்துள்ளது.

இதன்போது, பாப்பரசரின் சவப்பெட்டியை சிவப்பு மெழுகு முத்திரைகளால் கர்தினால்கள் அடையாளப்படுத்தியுள்ளனர்.

அத்துடன், பாப்பரசர் பிரான்சிஸின் கல்லறையில் இலத்தீன் மொழியில் அவரது பெயர் ‘ஃபிரான்சிஸ்கஸ்’ என எழுதப்பட்டுள்ளது.

தான் இறந்த பின்னர் ரோம் தேவாலயத்திற்குள் தனது உடல் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்ற விருப்பத்தை பாப்பரசர் பிரான்சிஸ் கடந்த 2023 ஆம் ஆண்டில் வெளிப்படுத்தியிருந்தார்.

மூன்று நாள்களில் மூன்று லட்சத்துக்கும் மேற்பட்டோர் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

கார்டினல்கள் குழு தலைவர் கியோவானி பாஸ்டிஸ்டா ரே, இறுதிச் சடங்குகளை முன்னின்று நடத்தினார்.

இறுதிச் சடங்குகளில் உலகத் தலைவர்கள், பிரிட்டன் இளவரசர் வில்லியம் உட்பட பல நாடுகளின் அரச குடும்பத்தினர் என 160 இற்கும் மேற்பட்ட முக்கிய பிரமுகர்கள் பங்கேற்றனர்.

செயின்ட் பீட்டர்ஸ் தேவாலயத்திலிருந்து 6 கிலோ மீற்றர் துாரத்தில், வத்திக்கனுக்கு வெளியே உள்ள புனித மேரி தேவாலயத்துக்கு போப்பின் உடல் அடங்கிய சவப்பெட்டி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

அப்போது, சாலைகளின் இரு பக்கங்களில், 2.5 லட்சத்துக்கும் மேற்பட்டோர் குவிந்திருந்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.





கனடா முரசு
சனிக்கிழமை 26/04/2025

**பயங்கரவாத அமைப்பில் சேர முயன்ற நபர் கைது**

கனடாவை விட்டு வெளியேறி ஒரு பயங்கரவாத அமைப்பில் சேர முயன்ற குற்றச்சாட்டில் கனடியர் ஒருவரை, பொலிஸார் கைது செய்துள்ளனர். 02



# வான்கூவர் திருவிழா கூட்டத்திற்குள் பாய்ந்த கார்; பலர் உயிரிழந்த சோகம்

**கனடாவில் லாபு லாபு தின தெரு விழாவில் நடந்த கோர விபத்தில் பலர் உயிரிழந்துள்ளனர்.**

**கனடாவின் வான்கூவர் நகரில் இரவு 8 மணிக்கு சன்செட் ஆன் ஃப்ரேசர் பகுதியில் நடைபெற்ற லாபு லாபு தின தெரு விழாவில் எதிர்பாராத விதமாக ஒரு கார் கூட்டத்திற்குள் புகுந்ததில் பலர் பரிதாபமாக உயிரிழந்தனர்.**

**மேலும், பலர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த வான்கூவர் கார் விபத்து அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.**

உள்ளூர் ஊடகங்களில் வெளியான தகவல்களின்படி, கறுப்பு நிற எஸ்.யூ.வி. வாகனம் ஒன்று அதிவேகமாக திருவிழா பகுதிக்குள் புகுந்து, அங்கிருந்த ஏராளமான மக்களை இடித்துத் தள்ளியுள்ளது.

மேலும், அந்த வாகனத்தை ஓட்டியவர் ஒரு இளம் ஆசிய இளைஞராகவும், அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் போலவும் காணப்பட்டதாக நேரில் பார்த்தவர்கள் கூறியுள்ளனர்.

பிலிப்பைன்ஸ் சமூகத்தினர் வெகு விமரிசையாக கொண்டாடும் லாபு லாபு பண்டிகையின் போது இந்த துயர சம்பவம் நிகழ்ந்துள்ளது.

E. 41st அவென்யூ மற்றும் ஃப்ரேசர் வீதி சந்திப்பில் இந்த வான்கூவர் தெரு விழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது வாகன ஓட்டுநர் ஒருவர் கட்டுப்பாடு இழந்து கூட்டத்திற்குள் வேகமாக நுழைந்துள்ளார் என்று நேரில் கண்ட சாட்சிகள் தகவல் தெரிவிக்கின்றன.

ஆரம்பகட்ட தகவல்களின்படி, இந்த எஸ்.யூ.வி. மோதியதில் (SUV crash) பலர் உயிரிழந்துள்ளனர். பத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர் என கூறப்படுகிறது.

வான்கூவர் பொலிஸ் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து மீட்பு பணிகளை மேற்கொண்டனர்.

இந்த வான்கூவர் விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் காயமடைந்தவர்களின் நிலை குறித்து தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

சம்பந்தப்பட்ட ஓட்டுநர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார் என பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்த துயரச் சம்பவத்திற்கு கனடா பிரதமர் மார்க் கார்னி தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

# இந்திய பயணத்தை தவிர்க்குமாறு கனடா மக்களுக்கு அறிவுறுத்தல்

ஜம்மு காஷ்மீரில் பயங்கரவாத அச்சுறுத்தல் இருப்பதாக கனடா தனது நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜம்மு - காஷ்மீரில் உள்ள பஹல்காம் பகுதிக்குச் சென்ற சுற்றுலாப் பயணிகள் மீது கடந்த 22 ஆம் திகதி பயங்கரவாதக் கும்பல் கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தியது. இதில் 26 பேர் பரிதாபமாகக் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதல் சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தி இருந்தது. அதே சமயம் இந்த தாக்குதல் சம்பவத்திற்கு இந்தியா மட்டுமல்ல பல்வேறு நாட்டுத் தலைவர்களும் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

இதையடுத்து, பஹல்காம் உள்ளிட்ட ஜம்மு காஷ்மீரின் பல்வேறு பகுதியில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டு தீவிர கண்காணிப்பில் இந்திய இராணுவப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்

இந்நிலையில் பஹல்காம் தாக்குதலை அடுத்து



ஜம்மு காஷ்மீர் பயணத்தை தவிர்க்குமாறு கனடா தனது நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அட்டாரி வாகா எல்லை மூடப்பட்டதை சுட்டிக்காட்டி இந்தியா - பாகிஸ்தான் எல்லைப்பகுதி கொந்தளிப்புடன் உள்ளதால் பயணத்தை தவிர்க்குமாறு கனடா எச்சரிக்கை விடுத்துள்ளது.



# கனடாவில் டெஸ்லா வாகனங்கள் விலைகள் 21 சதவீதம் அதிகரிப்பு

கனடாவில் டெஸ்லா வாகனங்களின் விலைகளை 21 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

கனடா அரசு அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யும் வாகனங்களுக்கு 25 சதவீதம் வரி விதித்ததைத் தொடர்ந்து, இந்த விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

Model 3 Long Range AWD இப்போது 79,990 டொலராக விற்பனை செய்யப்படுகிறது, இது முந்தைய விலையான 68,990 டொலருடன் ஒப்பிடுகையில் 10,000 டொலர் அதிகம்.

Model 3 Performance-ன் விலையும் 79,990 டொலரிலிருந்து 89,990 டொலராக உயர்ந்துள்ளது. Model 3 Rear-Wheel Drive மொடல் தற்போது விற்பனைக்கு இல்லையென குறிப்பிடப்பட்டுள்ளது.

Model Y Long Range இப்போது 84,990 டொலராகும் - முன்னதாக இதன் விலை 69,990 டொலராக இருந்த நிலையில், தற்போது 15,000 டொலர் அதிகரித்துள்ளது.




## பயங்கரவாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றாறியோ மாமாணத்தைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரின் பெயர் மற்றும் அவர் சேர்ந்ததாகக் கூறப்படும் அமைப்பின் பெயர் தொடர்பான தகவல்கள், வெளியீட்டு தடைக்கு உட்பட்டு இருப்பதால் பொலிஸார் இதற்கு மேலதிக தகவல்களை வெளியிடவில்லை.

சந்தேக நபர் கடந்த 20 ஆம் திகதி பிராம்ப்டன் நீதிமன்றத்தில் முதல் முறையாக முன்னிலையாகியிருந்தனர்.

அவர் தற்போதும் காவலில் உள்ளார் என்றும், எதிர்காலத்தில் நடைபெற உள்ள நீதிமன்ற விசாரணைக்கு அப்போது திகதி நிர்ணயிக்கப்படும் என பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்த விசாரணையில் உதவிய மைக்கு, பீல் பிராந்திய பொலிஸாருக்கு, கனடா எல்லைப் பாதுகாப்பு ஆணையத்திற்கும், கனடா பொதுமுறையியல் சேவைக்கும் மற்றும் பசிபிக் பிராந்திய INSET குழுவிற்கும், ஒன்றாறியோ INSET குழு நன்றி தெரிவித்துள்ளது.